
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 896**
**Published on Oct 9, 2016**

பொருளடக்கம்

தேவனுக்கு உடன் வேலையாட்கள் ............ 2

தேவனுடைய அன்பான
பராமரிப்பில் இளைப்பாறுதல் ............... 6

இயேசுவின் மானிட ஜீவனுக்குரிய... .......... 16

BS Tamil Version - 37

2016

# தேவனுக்கு உடன் வேலையாட்கள்

*Co-laborers with God*

**"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள், உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது."—1 கொரி. 16:13,14.** (NKJV)

எருசலேமுக்காகவும் அங்கே மையங்கொண்டிருந்த பரிசுத்தமான நன்மைகளுக்காகவும், பதில் (திடீரென்று) வரும் வரைக்கும் பல மாதங்களாக நெகேமியா தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். நெகேமியா ராஜாவுக்கு அந்தரங்க காரியதரிசியாக இருந்தார். அந்த ராஜா ஒரு விருந்தை ஆயத்தம் செய்திருந்தான். ராஜஸ்திரீயும், நெகேமியாவும், மற்றவர்களும் அங்கிருந்தார்கள். எல்லாரும் பட்டு உடுத்தி ஆபரணங்கள் அணிந்து, புன்னகையோடும், மகிழ்ச்சியோடும் இருந்தார்கள். ஆனால் தன்னுடைய நம்பிக்கைக்கு உரிய காரியதரிசி துக்கத்துடன் இருந்ததை - அவனுடைய புன்னகையின் ஊடாக துக்கம் வெளிப்பட்டதை ராஜா கண்டு கொண்டான். அவனுக்கு வியாதி இல்லை என்பதைக் கண்ட ராஜா மனக்கவலைதான் என்று கூறி, அது என்னவென்று விசாரித்தான். இது நெகேமியாவுக்கு ஒரு ஆபத்தான தருணமாயிருந்தது. ஏனெனில் அக்காலத்தில் ராஜாக்கள் முழுவதும் சர்வாதிகாரியாகவும் எளிதில் மனநிலை மாறுகிறவர்களாகவும் இருந்தார்கள். ராஜாவினிடத்திலோ அவனுடைய அலுவல்களிலோ உள்ள அக்கறையின்மை அல்லது அந்த மகிழ்ச்சியான தருணத்திற்கு தகுதியற்ற நூறு காரியமாகவோ அந்த கவலையை அர்த்தப்படுத்தி விளக்கப்பட்டிருக்கலாம்.

எப்படி பதிலளிக்க வேண்டும் என்பதை அறியும் ஞானத்திற்கான நெகேமியாவின் ஜெபம் உடனடியாக தேவனிடத்திற்கு சென்றது. ஏனெனில் அதற்கு முன்னதாக ஜெபம் பண்ணியிருந்த போதிலும், அந்த ஞானத்தை அவன் அந்த நேரத்தில் பெற்றிருக்கவில்லை. தன்னுடைய இருதயத்தின் வாஞ்சைகளை மன விருப்பங்களை, தெரிவித்தாலும், அல்லது தெரிவிக்காவிட்டாலும், சர்வவல்லவரால் அறிந்து கொள்ள முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். ராஜாவைக் கோபப்

நீங்கள் செய்யக்கூடிய மிகவும் புத்தியுள்ள காரியம் ஞானத்தை சம்பாதிப்பதாகும். வேறெதை நீங்கள் செய்தாலும்

**உத்தம நிதானிப்பை விருத்தி செய்யுங்கள்!**



"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள், உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது." –1 கொரி. 16:13,14.(NKJV)

படுத்தாமல் அவனுடைய விருப்பத்திற்கு ஆதரவான பயன்தருகிற புத்தியுள்ள பதில் கூறுவதற்குத் தேவையான ஞானத்தை அவன் பெற்று கொண்டான். தன்னுடைய பிதாக்களின் நகரம் பாழாக்கப்பட்டு கிடப்பதே தன்னுடைய மன துக்கத்திற்கான காரணம் என்று அவன் ராஜாவிடம் கூறினான். அதன் விளைவு என்னவெனில் ராஜா, அந்த வேலையை நடப்பிக்கும் படிக்கும், தேவைப்பட்டால், அண்டை மாகாணங்களின் அதிபதிகளை உதவிக்காக அழைக்கவும் முழு அதிகாரத்துடன், யூதேயாவின் விசேஷித்த அதிபதியாக நெகேமியாவை நியமித்தான்.

## வழி முறைகளில் காணப்படும் ஞானம்

நெகேமியா வெறுமனே ஒரு கனவு காண்கிறவராக இல்லாமல் ஒரு ஞானவானாக இருந்தது, அவன் பயன்படுத்திய நடைமுறை ஒழுங்குகளின் மூலம் வெளிப்பட்டது. ராஜாவால் கொடுக்கப்பட்ட இராணுவ வீரர்களின் பரிவாரங்கள் போன்றவை தவிர தன்னுடைய பிரயாணத்திற்காக அநேகமாக அவனே பொருட்செலவு செய்த ஒரு ஐசுவரியவானாய் அவன் இருந்தான். ஒரு நான்கு மாத பிரயாணம் அவர்களை எருசலேமுக்கு கொண்டு வந்து சேர்த்தது. அவனுடைய வருகையின் நோக்கம் இரகசியமாக

COURTESY BY :

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

வைக்கப்பட்டது. ஒரு சில நாட்களாக அவன் ஒரு சாதாரண பார்வையாளனாக, பார்வையிடுகிறதும், கேட்டு அறிகிறதுமாக இருந்தான். மேலும் இரவில் பழைய நகரத்தின் சுவர்களை சோதனை செய்தான். குறிப்பாக, அவர்கள் திரும்ப கட்ட வேண்டிய இடிந்து போன இடங்களையும் சுட்டெரிக்கப்பட்ட குவியல்களையும் பார்வையிட்டான். தனது திட்டத்தை சரியாகச் செயல்படுத்த முடியுமா என்பதைப் பார்த்து அதன் ஒழுங்கு முறையை வரைந்து கொண்டான். பிறகு அவன் ஜனங்களின் மூப்பர்களையும், அவர்களில் பிரதானமான பிரதிநிதிகளையும் அழைத்து, தன்னுடைய வருகையின் நோக்கத்தை அவர்களிடத்தில் விளக்கி, ராஜாவிடமிருந்து தான் பெற்ற தன்னுடைய அதிகாரத்தை அவர்களிடத்தில் காண்பித்து, உடனடியாக பழுது பார்க்கும் வேலையை ஆரம்பிப்பதற்கான முறையை அவர்களிடத்தில் தெரிவித்தான்.

அவன் வெற்றிக்காக ஆர்வம் கொண்டிருந்ததைப் போலவே, சத்துருக்களும் எல்லா விதத்திலும் அவர்களைத் தடுக்க ஆர்வம் கொண்டிருந்தபடியால், அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டியதின் அவசியத்தை அவன் உணர்ந்திருந்தான். சமாரியர்கள் பொறாமையுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் யேகோவாவை ஆராதனை செய்வதில் போட்டி ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள். மேலும், இந்த விஷயத்தில் இஸ்ரயேலர் பெறும் வெற்றி, தேவ தயவானது சமாரியர்களிடத்தில் இல்லாமல் யூதர்களிடத்தில் இருந்ததைப் போன்று குறிப்பாகக் காண்பிக்கும். அல்லாமலும், யூதர்களின் தரித்திரம் வறுமையினாலும் சகாயமற்ற நிலைமையினாலும் தாங்கள் ஆதாயமடையலாம் என்றும் சமாரியர் நம்பியிருந்தார்கள். அதாவது சமயம் வாய்த்தால் அவர்களைக் கொள்ளையிடுவதும் தவறல்ல என்று எண்ணினார்கள். நெகேமியாவின் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நகரத்தின் நாலா பக்கங்களிலுமுள்ள பிரதான மனிதர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுடன் இந்த வேலையில் இணைந்தார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டிற்கு மிக அருகிலுள்ள எதிரான பகுதி சுவரை பழுது பார்த்துக் கட்டினார்கள். இது ஒரு ஞானமுள்ள திட்டம், ஏனெனில் ஒவ்வொருவரும் தங்களுடைய அருகாமையிலுள்ள சுவர்கள் பெலமானதாக இருக்க வேண்டும் என்பதில் விசேஷித்த விருப்பம் கொண்டிருப்பார்கள். மேலும் அது ஒரு புகழ்ச்சியாகவோ அல்லது இகழ்ச்சியாகவோ கட்டுபவரின் திறமைக்கு ஒரு முக்கியமான ஞாபகச் சின்னமாக இருப்பதால், இந்த வேலையோடு ஒரு குறிப்பிட்ட அளவு இயற்கையான பெருமையும் இணைந்து கொள்ளும்.

நெகேமியாவும் மற்றவர்களோடு இந்த வேலையில் இணைந்து கொண்டான். அவனுடன்




**எச்சரிக்கை !**

**கொடியகாலங்கள் வருகிறது**

**2 தீமோ. 3:12–17**

வந்த ஊழியக்காரர்களும் இதில் பங்கு பெற்றார்கள். அவனுடைய வைராக்கியமான ஆவியானது சோர்ந்து போயிருந்த ஜனங்களுக்கு ஊக்கமளிப்பதாயிருந்தது; அவர்கள் தைரியமடைந்தார்கள், நம்பிக்கை விருத்தியடைய ஆரம்பித்தது. பின்பு சத்துருக்களிடமிருந்து, மனமடிவும் எதிர்ப்புகளும் வந்தன. ஒரு தாக்குதலும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அதனை நெகேமியா தெரிந்து கொண்டு, மற்றவர்கள் வேலை செய்யும்போது, குடும்பங்களின் தலைவர்கள் ஆயுதம் தரித்தவர்களாய் காவல் காத்துக் கொண்டிருக்கும்படி செய்தான்; வேலை செய்தவர்களும் தற்பாதுகாப்புக்காக பட்டயத்தை வைத்திருந்தார்கள். இவ்விதமாய் நெகேமியா வேலையை நடத்தினான்.

அவர்கள் ஆயத்தமாயிருந்ததை அவர்கள் சத்துருக்கள் கண்டபோது, அவர்கள் திட்டமிட்டிருந்த தாக்குதல் கைவிடப்பட்டது. மேலும் மனமடிவு நிவிர்த்தி செய்யப்பட்டது. அவர்களுடைய முயற்சி நகைப்புக்குள்ளாக்கப்பட்டு, சாத்தியமில்லை எனவும், இனிமேல் எந்த பிரயோஜனமுமில்லை எனவும் பரிகசிக்கப்பட்டது. உடல் உழைப்புக்கு பழக்கப்படாதவர்கள், நோவெடுத்து களைப்புற்று மனமடிவடைந்தார்கள். சுவரின் உயரம் உயர உயர, கற்களை வைப்பதற்கும், சாந்து பூசுவதற்கும் இன்னும் அதிக கடினமாக இருந்தது; மேலும் அதிகமான கற்கள் சுவரில் வைக்கப்பட்ட பின்பு, வெகு சில பொருத்தமான கற்களே, இடிபாடுகளில் மீந்திருந்தன. தேவனிடத்திலுள்ள விசுவாசத்தையும் உண்மையையும் பரீட்சிக்கும் காலமாய் அது இருந்தது. அப்படிப்பட்ட பரீட்சைகளுக்காக சோதனைகளும், கஷ்டங்களும் தேவனுடைய ஜனங்கள் எல்லாரிடத்திலும் வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றன. **"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."** (2 தீமோ. 3:12). பல்வேறு அனுபவங்கள் மூலமாக ஜெயங்கொள்ளுகிறவர்கள் தேவனுடைய ஊழியத்திற்காக அபிவிருத்தியடையும்படிச் செய்யப்படுகிறார்கள்.

## "விசுவாசத்தில் நிலைத்திருங்கள்"

நெகேமியாவின் விசுவாச உறுதியும் தைரியமும் எதற்காக பரீட்சிக்கப்பட்டது என்றும், அதனால் அவனுக்கு கிடைத்த வெகுமதி




என்னவென்றும் கேட்கப்படலாம். ஒவ்வொரு நல்ல முயற்சியையும் தொடர்ந்து குணவிருத்தி என்ற வெகுமதி கிடைக்கிறது என நாங்கள் பதிலளிக்கிறோம். நெகேமியா காலத்தில் விசுவாசமுள்ளவர்களாக ஜீவித்தவர்களுடைய வெகுமதியானது இயேசுவை பின்பற்றுகிறவர்கள் மத்தியில் விசுவாசமுள்ளவர்களின் வெகுமதியை விட அடிப்படையில் வேறுப்பட்டது. பிந்தையவர் களுக்கு எஜமானருடன் அவருடைய மகிமையான மேசியாவின் ராஜ்யத்தில் பங்கடைவார்கள் என்ற வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. "**பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்:**" "**ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்**" *(லூக். 12:32; வெளி. 3:21).*

ஆனால் நெகேமியா ராஜ்யத்துக்குரிய இந்த ராஜ்ய வாக்குத்தத்தங்களில் எந்த பங்கையும் பெறமுடியாது. ஏனெனில் இந்த ராஜ்யத்திற்கான அழைப்பு இருந்த காலத்திற்கு அதாவது பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னான காலத்தில் அவன் வாழ்ந்தான். அவனும் அவனுடைய காலத்தில் வாழ்ந்து விசுவாசத்தின் உறுதியையும், உண்மைப் பற்றையும் காண்பித்த மற்றவர்களும் பவுல் அப்போஸ்தலரால் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் தனிப்பட்ட முறையில் குறிப்பிடப் படவில்லை. ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி அவர்களும் இந்த அட்டவணையில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி "**அவர்கள் தேவனுக்கு பிரியமானவர்களென்று சாட்சி பெற்றார்கள்**" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர்கள் தங்களுடைய வெகுமதியை அதாவது சபையானது தன்னுடைய பங்கை மீட்பருடன் ராஜ்யத்தின் பரலோகத்துக்குரிய பகுதியில் பெற்றுக் கொண்ட பிற்பாடு, இவர்களுடைய வெகுமதியான ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியில் ஒரு பங்கை இவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என பரி. பவுல் குறிப்பிடுகிறார். ஏனெனில், "**அவர்கள் நம்மை யல்லாமல் பூரணராகாதபடிக்கு, விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.**"

இப்போது நாம், நமது பாடத்தின் தலைப்பு வசனத்தை சிறிது விளக்கமாக பார்க்கலாம்! ஆம்! நாம் நம்முடைய கிறிஸ்தவ குணத்தை காத்துக் கொள்வதற்கு தேவையான உதவியை பெற்றுக் கொள்ளும்படி, ஜெபத்திலே விழித்திருந்து, பரலோக கிருபையுடன் நேரடியான தொடர்பில் இருக்க வேண்டும். நாம் (பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள்) கவனமற்றவர் களாகவும், குளிருமின்றி அனலுமின்றி இருக்கிற வர்களாகவும், இந்த ஜீவியத்தின் கவலைகளுக்குள் சிக்குண்டவர்களாகவும் இராதபடிக்கு, "நீங்கள் விழித்திருங்கள்" என்ற இந்த புத்திமதி நமக்கு இன்னும் தேவையானதாகவே இருக்கிறது. பிரதிஷ்டை செய்தவர்களாக, பரிசுத்த முள்ளவர்களாக, அர்ப்பணித்தவர்களாக, "பரிசுத்தவான்களாக," நாம் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்புக்கு தகுதியாகும்படிக்கு நாம் நாடுகிறோம். மேலும் நன்றியறிதலுடன் நம்முடைய சிலாக்கியத்தைக் குறித்து கவனமுள்ளவர் களாயிருக்கிறோம். குடும்பம், நண்பர்கள், மற்றும் மாம்ச விருப்பங்கள் போன்ற பல்வேறு எதிர்ப்புகளுக்கு எதிராக நாம் விசுவாசத்தில் "நிலைத்திருக்க" வேண்டுமென நாம் எச்சரிக்கப் படுகிறோம். ஏனெனில் சத்தியத்தால் பலமாக தாங்கப்பட்டவர்களால் மாத்திரமே இந்த தீங்கு நாளில் நிலைத்து நிற்க முடியும். நம்முடைய நம்பிக்கைகளின் நிலையான நியமங்களை நாம் கற்றறிந்து, பயிற்சி செய்தும் நிலைத்திருக்க வேண்டும். ஓ, "**கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர் களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியை யிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.**" *(1 கொரி. 15:58).*

பிரதிஷ்டை செய்த மாணாக்கன் தன்னுடைய நம்பிக்கையில் ஒரு தெளிவானதும், நிச்சயமானதும், "விசுவாசத்தில்" உறுதியானதும், சமச்சீரானதும், இசைவானதும், தெளிவான புரிந்து கொள்ளுதலும் கொண்டிருப்பது அவசியமாகிறது. இல்லாவிடில் போதகமாகிய பலவித காற்றினாலே அடிபட்டு அலைகிறவனாயிருப்பான் (எபே. 4:14). நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவும் தேவனுக்கும் அவருடைய காரியங்களுக்கும், உண்மையாகவும்

விசுவாசமுள்ளவர்களாய் இருக்கவும் கற்றுக் கொள்வோமாக. புருஷர்கள் ஆயுதம் தரித்து யுத்தத்திற்கு தங்களை ஆயத்தம் செய்வதைப் போல, “திடன் கொள்ளுங்கள்” என்று இப்போது இந்த வேத வசனம் குறிப்பிடுகிறது. நீதியின் பாதையில் பொருத்தமான நியாயமான போதகங்கள் நமக்கு கொடுக்கப்பட்ட பின்பு, திடமான குணத்தை எதிர்ப்பார்க்க ஆண்டவருக்கு உரிமை இருக்கிறது. நாம் அப்படிச் செய்தால் மட்டுமே தேவனுக்கு பிரியமாயும் அவரால் ஏற்றுக் கொள்ளப் படுகிறவர்களாயும் இருக்க முடியும். உண்மையுள்ள ஊழியத்திற்கும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தில் வெற்றி பெறவும் பலமும் தைரியமும் ஆகிய இரண்டுமே அவசியமானதாகும். இவ்விரண்டு சிறந்த குணங்களும், தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் உட்படுத்தப்படும் பல்வேறு சோதனைகளின் கீழ், யேகோவாவிடம் வைத்துள்ள விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் பொறுமை யோடு சகிப்பதின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

தேவன் தம்முடைய சத்திய மேஜையில் பந்தியிருக்கும்படி நம்மை அழைத்து, பின்பு அதன் மூலம் நாம் பெற்றுக் கொண்ட பலத்தினை நாம் உபயோகிக்க வேண்டிய விதத்தை அவர் காண்பிக்கிறபோது, குழந்தைகளாக அல்லது சிறு பிள்ளைகளாக பின்தங்கியிருக்க சாக்கு போக்கு சொல்ல நாம் அனுமதிக்கப்படோம். நாம் கிருபையிலும், எஜமானருடைய ஊழியத்தில் உபயோகமுள்ளர்களாயிருப்பதிலும் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்! தேவனுடைய பிள்ளைகளாவதுடன், இயேசு கிறிஸ்துவை தங்களுடைய ஆண்டவராகவும் நம்பியிருக்கிற எல்லோருடைய பங்கிலும், குணவளர்ச்சியின் அவசியத்தின் பெரிய பாடத்தை நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில் உள்ள பவுலின் வார்த்தைகள் போதிக்கின்றன. பிரதிஷ்டை செய்தவர்கள் விழித்திருக்கவும் அதுபோல ஜெபம் பண்ணவும் வேண்டும். உலகம், மாம்சம் மற்றும் எதிராளியின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு எதிராக **“விசுவாசத்தில் நிலைத்திருக்க”** வேண்டும். **“கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்தப்பட்ட”** புருஷரைப் போல தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆண்டவருடைய நாமத்தினாலும் அவருடைய உதவியினாலும் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் தடைகளை மேற்கொள்வதின் மூலம் அவர்கள் உறுதியான வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். **“கடைசியாக, என்**




**சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங் கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்: சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்: பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணிய மென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.”** *(எபேசியர் 6:10-18).*

***

# தேவனுடைய அன்பான பராமரிப்பில் இளைப்பாறுதல்

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" 1 பேது. 5:7.

*Resting in God's Loving care*

நாம் இந்த யுகமாறுதலின் காலத்தின் நுழைவாசலில் நிற்பதால், தேவன் நமக்காக பண்டக சாலையில் வைத்திருப்பது என்ன என்பதைக் குறித்து, இயல்பாகவே ஆச்சரியப்படுகிறோம். எல்லாப் பக்கங்களிலும், மனித செயல்பாடுகளின் ஒவ்வொரு வழியிலும் உலக புரட்சி அதிகமதிகமாக வெடித்து வருவதற்கான அடையாளங்களைக் குறித்து நாம் தொடர்ந்தேர்ச்சியாகக் காண்கிறோம், அது கர்த்தருடைய ஜனங்களை மிகவும் கடுமையாக பரீட்சிப்பதாகவும் உள்ளது. தற்போதைய சூழ்நிலைகள் மிக அதிகமான அளவில் இருந்தாலும்கூட, பிரெஞ்சு புரட்சி ஏற்பட காரணமாக இருந்ததைப் போன்ற சமாளிக்க முடியாத நெருக்கமான நிலைமைக்கு மிகவும் ஒத்திருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படுவதற்கு சற்று முன்பாக மதம் இழிவுபடுத்தப்பட்டது. அதிகாரம் மீறப்பட்டது. முதலாளி வர்க்கத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையேயான உறவுகளில் விரோதம் காணப்பட்டது. சமுதாயப் பிரிவுகளுக்கிடையில் வெறுப்பு பெருகியது, உள்ளார்ந்த அதிருப்தி எங்கும் பரவியது. வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்தது, அடிப்படை மாற்றத்துக்கான கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடந்தன, பெரிய அளவில் சமூக வேறுபாடுகள் காணப்பட்டது, போதுமான உணவு கிடைக்காத தரித்திரர் உணவுக்காக கிளர்ச்சி செய்தனர். சமுதாயத்தின் அடிமட்ட நிலையில் இருந்தவர்கள், செல்வந்தர்கள் மற்றும் அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பணம் மற்றும் பல்வேறான "அரசுரிமைகளையும்" வலியுறுத்திக் கேட்க ஆரம்பித்தார்கள். சீர்திருத்தவாதிகள் அனைத்து பிரச்சனைகளுக்கும் அவர்களுடைய நிவாரணங்களை கொடுத்துக் கொண்டிருந்தனர். நல்ல நோக்கமுடையவர்கள் சீர்படுத்தப்பட்ட நிலைமைக்காக ஒவ்வொன்றும் நடப்பதாகக் கண்டனர்.

இப்போதுள்ள காரியங்களின் ஒழுங்குமுறை மீது வருகிறதான பேராபத்தின் அடையாளங்கள் பல ஆண்டுகளாக அதிகமதிகமாகத் தெளிவாகிக் கொண்டே வருகிறது. அதிகமதிகமாக, "**பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்து போம்.**"(லூக். 21:26 NKJV) புதிய வருடத்திலும் சந்தேகமில்லாமல், அரசாங்கம், ஆட்சி செய்யும் வகுப்பார், நிதி, தொழில், வியாபாரம், தொழிலாளர், வேளாண்மை, கல்வி, குடும்பம், சமுதாயம், சபை, அரசியல் முதலியவற்றில் மேலும் மேலும் குழப்பங்கள் வெடித்தலும், துயரமும் தத்தளிப்புமான சூழ்நிலைகள் காணப்படும்.

சமதர்ம (சோஷியலிஸம்) கோட்பாடானது உலக அரசியல்களில் தீவிரமாக பரவி வருகிறது. உலக அரசாங்கங்கள் கடனில் மூழ்கி நொடிந்து போன நிலைமையிலிருக்கின்றன. கலகக்காரர்களின் அநேக பிரிவுகள் கிறிஸ்தவ உலகத்தின் மீது வெறுப்பைக் காண்பிக்கின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற புதிய அல்கொய்தா, 2006-ல் ஈராக்கில் இஸ்லாமிய நாடு என்பதாக (ISI) மறு அடையாளப் பெயரிடப்பட்டது. இது தனது பெயருடன் "மற்றும் சிரியா" என்றும் பின்னர் சேர்த்துக் கொண்டது. ISIS-ன் குறிக்கோளானது ஈராக்கிலும், சிரியாவிலும் சன்னி முஸ்லீம் பிரிவினர் பிரதேசத்திலும் இஸ்லாமிய நாட்டை உருவாக்குவதாகும். 2006-ல் ஈராக்கில் இருந்த அல்கொய்தா - அபிமுசாப் அல் சார்காவி என்பவரின் இரக்கமற்ற தலைமையின் கீழாக நியாயம் வழங்குவது போன்ற தோற்றத்தில், குடிமக்களை காட்டுமிராண்டித்தனமாய் நடத்தி, அது பெரும்பாலான ஷியா வம்சத்தினருக்கு எதிராக ஒரு இனம் சார்ந்த யுத்தத்தைப் பற்ற வைக்க முயன்றது. ISIS தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பட்டணங்களில் ஷாரியா சட்டத்தை அமல்படுத்தியது. மாணவர்களும், மாணவிகளும் கல்விக் கூடங்களில் பிரித்து வைக்கப்படுவதும்; பெண்கள், பொது இடங்களில் முழுவதும் மறைக்கும் திரையாக நிகாப் (nigab) அணிவதும் கட்டாயமாக்கப்பட்டது. ஷாரியா நீதிமன்றங்கள் அநேகமுறை காட்டுமிராண்டித்தனமான நியாயத்தையே வழங்கியது; இசை முற்றிலும் தடை செய்யப்பட்டது, ரமலான் சமயத்தில் நோன்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஷாரியா சட்டம் ஜீவியத்தின் மதசம்பந்தமான மற்றும் மதசம்பந்தமில்லாத காரியங்களுக்கும் அமல்படுத்தப்பட்டது.

நைஜீரியாவின் வடபாகத்தில் அரசியலில் நம்பிக்கை கொண்டிருந்த போக்கோஹராம் என்ற ஒரு இஸ்லாமிய பிரிவு, கெட்ட நோக்கமுடைய




அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.
- 1 பேது. 5:7

போலியான முஸ்லீம் வகுப்பாரால் கைப்பற்றப் பட்டது. இது அவர்களுக்கு எதிராகவும், நைஜீரியாவின் ஐக்கிய குடியரசுக்கு எதிராகவும் யுத்தத்தை நடத்தி ஷாரியா சட்டத்தின்படி ஆளப்படுகிற ஒரு “தூய்மையான” இஸ்லாமிய நாட்டை உருவாக்க விரும்பியது. இதன் நோக்கம் ஆப்பிரிக்காவில் மிக அதிகமான மக்கள் தொகை கொண்ட நாட்டில் ஷாரியா சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி, பெரும்பாலான முஸ்லீம்கள் அடங்கிய வடபுறத்திற்கும், மிகுதியான கிறிஸ்த வர்கள் அடங்கிய தென்புறத்திற்கும் இடையே பிரிவினையை உண்டு பண்ணுவதாகும். உலகமானது சிரீயாவை அடிப்படையாகக் கொண்ட *ISIS* உலகத்தை ஸ்தம்பிக்கச் செய்த நிலையில் மேற்கத்திய நாடுகள் *ISIS*-க்கு எதிரான முயற்சிகளில் ஈடுபட்டது போக்கோஹராமின் தாக்குதல்கள் அதிகரித்தன. போக்கோஹராம் பள்ளிகள், ஆலயங்கள் மற்றும் மசூதிகளை போக்கோஹராம் குண்டு வீசிதகர்த்தது; பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தியது. அரசியல்வாதி களையும், மதத் தலைவர்களையும் ஒரே மாதிரியாக படுகொலை செய்தது. கடந்த வருடத்தில் நைஜீரியா, சாட் மற்றும் கேமரூன் நாடுகளில் போக்கோஹராம் நடத்திய படுகொலைகளினால், மிகக் கொடூரமான தீவிரவாதப் பிரிவினர் என்ற கேவலமான பட்டப் பெயரைச் சம்பாதித்துக் கொண்டது. வேறு சில பயங்கரவாத பிரிவுகளின் பெயர்களையும் நாங்கள் குறிப்பிடுகிறோம்: உஸ்பேகிஸ்தானின் (ஆசியா) இஸ்லாமிய இயக்கம், ஆஸ்பட் அன் அன்சர் (மத்திய கிழக்கு), அன்சார்டைன் (ஆப்பிரிக்கா), அல் நுஸாப்ரன்ட் (மத்திய கிழக்கு), ஈராக்கின் இஸ்லாமிய நாடு (உலகம் தழுவியது).


சுகாதாரம் மற்றும் மீட்புதவிப் பணி அதிகாரிகள், பிப். 10, 2016-ஆம் தேதி சொன்னது: “தற்கொலை செய்து தங்களையே வெடிக்க வைக்கும் வெடிகுண்டு பெண்கள் இருவர் வடகிழக்கு நைஜீரிய அகதிகள் முகாமில் சென்று அவர்களை வெடிக்கச் செய்து குறைந்தபட்சம் 58 பேரை கொன்றிருக்கிறார்கள். நைஜீரியாவின் வடகிழக்கிலுள்ள மிகப்பெரிய பட்டணமான, மைதுகுரி போக்கோஹராமின் பிறப்பிடமாகும் அந்த பட்டணத்திலுள்ள சுகாதாரப் பணியாளர்கள் சொல்கிறபடி, போக்கோஹராம் இஸ்லாமிய கிளர்ச்சியினால் தங்கள் இல்லங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, சுமார் 50,000 மக்கள் கூடியிருந்த ஒரு முகாமில் செவ்வாய்க் கிழமை காலையில் நிகழ்ந்த அந்த இரட்டை குண்டு வெடிப்பினால், ஜனங்களில் 78 பேர் காயமடைந்து, சிகிச்சை பெற்றனர். அவர்கள் தங்கள் பெயர்கள் மறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பேசினார்கள், அதைப் போலவே மீட்புதவிப் பணி அதிகாரிகளும் தங்களுக்கு பத்திரிக்கையாளர்களிடம் பேசுவதற்கு அதிகாரம் இல்லை என்று கூறினர்.” தேசங்கள் ஒன்று சேர்ந்து, தீவிரவாத




பயமுறுத்தலுக்கு எதிர்த்து நிற்பதில் பிராந்திய ஒற்றுமை எப்படி ஒத்தாசையாயிருக்க முடியும் என்று பார்க்கத் தொடங்கிவிட்டன. பன்னாட்டுப் படைகள் சாட், நைகர், நைஜீரியா மற்றும் கேமரூன் படைகளுடன் சேர்ந்து போக்கோஹராமுடன் போரிடுவதைச் சுட்டிக்காட்டி அவர் சொன்னார். இந்த வகையிலான கொடுமையான நடவடிக்கைகள் தீவிரமாகப் பரவி வருகிறது. உலக அமைப்புகள் மிகுதியான எண்ணிக்கையில் கூட்டம்கூடி நிரந்தர சமாதானத்தை நாடித் தேடுகின்றனர்; ஆயினும், “**சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம், சமாதானம் என்று சொல்வார்கள்**” என்று எரே. 6:14 கூறுகிறது.

காலங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலிலிருந்தும், காரியங்களைப் பற்றிய உண்மைகளிலிருந்தும், இது “**விழித்திருக்கிறவர் களுக்கு**” (மாற் 13:33-37) தெளிவாகிறது. என்னவெனில், 1914-ல் தொடங்கிய இப்போதுள்ள மகா உபத்திரவ காலம், “**உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாதது மான மிகுந்த உபத்திரவ காலமாயிருக்கும்**” (மத். 24:21). அதினால் “**பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும், இடுக்கணும் உண்டாகும், சமுத்திரமும், அலைகளும்** (மானிட சமுதாயத்தின் அமைதலில்லாத, சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாத காரியங்கள்) **முழக்கமாயிருக்கும்** (தற்போதய சமுதாய ஒழுங்கின் காவல் அரண்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தலும், சீற்றங்கொள்ளுதலும்)” (லூக். 21:25). மனிதருடைய காரியங்களில் உலகளாவிய பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கிறது, அதனை திறமையாக கையாளக் கூடிய மனித முயற்சிகள் யாவும் வலிமையிழந்து போய்விடுகின்றன என்பதும்கூட தெளிவாகிறது.

இப்போதுள்ள காரியங்களின் ஒழுங்குகள் அழிக்கப்படுமென்று நாங்கள் நம்புகிறோம். இப்போது “அதிகார வர்க்கம்” என்று பேசப் படுகிறவைகளுக்கு எதிராக அவைகள்மீது அழிவு




தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்று அநேகர் அறிவிக்கின்றனர். மிகச் சீக்கிரத்தில் தடைகளைத் தாண்டி நடக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். கர்த்தரின் பிரசன்னத்தினால் அதிகமதிகமாக பூமி (இப்போதுள்ள சமூக ஒழுங்கு) அதிர்வதையும் பர்வதங்கள் (இப்போதுள்ள ஏறக்குறைய ஏகாதிபத்திய அரசாங்கங்கள் மற்றும் குடியேற்ற நாட்டினரின் அதிகாரங்கள்) மெழுகு போல உருகுவதையும் (படிப்படியாக பொது மக்களின் கோரிக்கைக்கு இறங்கி வருவதையும்) காண்கிறோம். *(சங். 97:4,5)*, மேலும் இந்த கர்த்தருடைய நாளில் வானங்கள் (கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள கத்தோலிக்கர் மற்றும் புராட்டஸ்டண்டுகள் இரண்டிலுமுள்ள கேடுண்டாக்கும் மிகப் பெருமளவிலான மதக் குருக்களின் அதிகாரங்கள்) மடமடவென்று பேரோசையுடன் (கிளர்ச்சி மற்றும் குழப்பம்), அகன்றுபோம், அது "**இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாளில் வந்திருக்கிறது.**" *(2 பேது. 3:10; 1 தெச. 5:2).*

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியில் தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களின் மனப்பான்மை எப்படி இருக்க வேண்டும்? நிச்சயமாகவே ஆச்சரியம், பயம் அல்லது பெரும் பீதி போன்ற எதுவும் இருக்காது! அந்த நாள் திருடனைப் போல அவர்களைப் பிடித்துக் கொள்வதற்கு, "**விழித்திருக்கிறவர்கள்,**" "**காலங்கள் மற்றும் வேளைகளைக் குறித்து**" அறியாதவர்களல்ல. "**நாம் இரவுக்கும், இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.**" *(1 தெச. 5:1-6).* நம்முடைய கர்த்தர் நமக்குச் சொன்னார் - (லூக். 21:25,26-ல் விவரிக்கப் பட்டவைகள்)மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடையதாயிருக்கும்போது "**மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும்** (சாத்தானுடைய தீமையான ஒழுங்கு முறைகள் கவிழ்க்கப்படுவதிலும், உலகம் மதம் போன்றவைகள் சம்பந்தமான காரியங்கள் மீது அதிகமான வெளிச்சம் உட்புகுவதிலும் வெளிப்படுவதையும்) **மேகத்தின்மேல்** (மகா உபத்திரவ காலத்தில்) **வருகிறதை**" நாம் (நம்முடைய அறிவின் கண்களால்) காண்கிறோம். அப்போது நம்முடைய மீட்பு (விடுதலை) சமீபமாயிருப்பதால், நாம் நிமிர்ந்து பார்த்து, நம்முடைய தலைகளை சந்தோஷத்துடன் உயர்த்த வேண்டும். ஏனெனில், "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று." *(வச. 27-32).*

கர்த்தருடைய ஜனங்களைக் குறித்தும், இக்காலத்தில் அவர்களிடம் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மையைக் குறித்தும் அற்புதமான ஒரு தீர்க்கதரிசனம் *சங். 46:1-ல்* காணப்படுகிறது. "**தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும்** (மிகப்பெரிய ஆபத்திலிருந்து அவர் நம்மை மூடிப் பாதுகாத்து, நம்முடைய பெலத்திற்கு மேற்பட்ட ஆபத்துக்களை வெற்றியுடன் சந்திக்க நமக்கு பெலன் கொடுக்கிறார்) **ஆபத்துக்காலத்தில் அனுகூலமான** (மிக அருகில் இருக்கும்) **துணையுமானவர் . ஆகையால் பூமி நிலை மாறினாலும்** (இப்போதிருக்கும் பூமிக்குரிய ஒழுங்கு முறைகள் உடைக்கப்பட்டு, அசைக்கப் பட்டு நீக்கப்படும் - *எபி. 12:26,27*), **மலைகள்** (இப்போதிருக்கிற பொல்லாத உலகத்தின் அரசாங்கங்கள்) **நடுச்சமுத்திரத்தில்** (சட்டத்துக்கு கீழ்ப்படியாத அடக்க முடியாத ஜனக்கூட்டத்தில்) **சாய்ந்து** (மூழ்கிப்) **போனாலும் அதின் ஜலங்கள்** (புரட்சியாளர்கள்) **கொந்தளித்துப்** (கருத்து வேறுபாடுகளால் போராடுகிற தன்னலக் கட்சிகள்) **பொங்கி** (மூர்க்கமான கோபத்தில் முழுபெலத்துடன் கூக்குரலிடுதல்) **அதின் பெருக்கினால்** (வகுப்புகளுக்கு எதிராக மக்களின் எழுச்சி) **பர்வதங்கள் அதிர்ந்தாலும்** (பயங்கரமான புரட்சிகளால் அசைக்கப்பட்டு பயத்தினாலும், பாதுகாப்பின்மையாலும் நடுங்குதல்), **நாம் பயப்படோம்**" (அச்சத்தில் இருக்க மாட்டோம்).

கடந்த 140 வருடங்கள் சுவிசேஷ யுகம் ஆயிர வருட யுகத்திற்குள்ளாக கவிந்து வந்து கொண்டிருக்கிற காலப்பகுதியாகும். இன்னும் இந்த கவிந்து வருதல் (lapping) நிச்சயமாக சொல்ல முடியாத வருடங்களின் எண்ணிக்கையில் தொடர்ந்து செல்லும். 1799-ல் தொடங்கி உபத்திரவ காலம் முடியும்போது, முடிகிற, "**அவன் தன்னை ஆயத்தப்படுத்தும் நாளின்**" (நாகூம் 2:3) ஒரு பகுதியான கடந்த 100 வருடங்களின்போது *(SITS 3, pp 23-59, 382-386; E-6, p 627; PT '74, pp38-43).* தேவன் பிரத்தியேகமாக அவருடைய மிகப்பெரிய நோக்கங்களில் இரண்டை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். (1) அவர் 1874-ல் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்திருக்கும் கிறிஸ்து மூலமாக *(SITS 2, pp 173-245; SITS 3; pp 121-134; 387-410* பார்க்கவும்), சுவிசேஷ யுகத்தின் மிகப்பெரிய அறுவடை வேலையைச் செய்து கொண்டிருக்கிறார், "**அறுப்பு உலகத்தின் முடிவு**"

[கிரேக்க பாஷையில் aion, யுகம்] (மத். 13:39); (2) அவர் கிறிஸ்துவின் மூலமாய் 1874-ல் தொடங்கிய சாத்தானைக் கட்டுதல் (வெளி. 20:1,2) மற்றும் அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுதல் (மத். 12:29; மாற். 3:27) போன்ற மிகப்பெரிய ஆயிர வருட யுக வேலையைச் செய்து கொண்டிருக்கிறார், வேறு விதமாகச் சொன்னால் சாத்தானின் ராஜ்யத்தைக் கவிழ்ப்பது, பூமியில் மனுக்குலத்தாரை ஆசீர்வதிப்பதற்காக சத்தியமும் நீதியுமுள்ள மகிமையான மத்தியஸ்த ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு ஆயத்தப்படுவதாகவும் இருக்கிறது. கடந்த 140 வருடங்களாக தேவன் (1) தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் மற்றும் குவாசி எலெக்ட் வகுப்பி னருக்காக விசேஷமானதொரு சுவிசேஷ யுக வேலையையும் (2) தெரிந்து கொள்ளப் படாதவர்களுக்காக விசேஷமானதொரு ஆயிர வருட யுக வேலையையும் செய்து கொண் டிருக்கிறார்.

இயேசு தம்முடைய முதலாம் வருகையின் முடிவில், "மேகத்திற்குள்ளாக" (அப். 1:9) சத்த மில்லாமல், உலகத்தாரும் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களும் அறியாத வகையில், ஆனால் அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட சீஷர்கள் மட்டும் அறிகிற வகையில் உயர எழும்பிச் சென்றது போல 1874-ல் அவருடைய இரண்டாம் வருகையின் ஆரம்பத்தில் "அப்படியே வெண்மையான மேகத்தின் மீது" அமர்ந்தவராய் (வெளி. 14:14) ஆவி ஜீவியாக மனுஷருடைய மாம்ச கண்களுக்குப் புலப் படாதவராக, உலகத்தாரைப் போலவே, தேவனுடைய பெயரளவிலான ஜனங்களும் அறியக்கூடாதவராக வந்தார். அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட சீஷர்களாகிய, விசுவாச முள்ள விழிப்புள்ளவர்கள் மட்டுமே "அதிக




உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை" (2 பேது. 1:19) உற்று கவனித்து, அவருடைய தட்டுதலுக்கு திறந்து (வெளி. 3:20) அவருடைய காணக்கூடாத அதரிசனமான பிரசன்னத்தை உணர்ந்து கொள்கிறார்கள்; பரத்திலிருந்து வரும் தூய ஞானத்தால் ஒளியூட்டப்பட்ட அவர்களுடைய "வாஞ்சையுள்ள விசுவாசக் கண்கள் வெண்மையான மேகத்தினூடாக ஊடுருவி இதோ மகிமையின் ராஜாவைக் காண்கிறது."(R 773).

முடிவு காலம் அல்லது "அவருடைய ஆயத்த நாள்" (நாகூ. 2:3), ரஸல் போதகரால் 1914-ல் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டது. (SITS 3, p23), ஆனால் உபத்திரவ காலம் 1914-ல் ஆரம்பிக்கும், அதே வருடத்தில் முடிவடையாது என்று 1904-ல் அவர் முடிவுக்கு வந்தார். அப்போதிருந்து, தொடர்ந்து, அதன் முடிவுக்கான தேதியை நிர்ணயிக்க அவர் மறுத்தார். இவ்வாறாக, 1914-க்கு பிற்பாடு முடிவு காலத்தின் முடிவு வரும் என்று உணர்த்தினார். E-6,p 453-ல் ஜான்சன் போதகர், முடிவு காலத்துக்கு ஆரம்பம் 1799 அக்டோபர் என்றும், அந்த காலத்தின் முடிவு பாகம் மிகவும் நீடித்த காலப்பகுதி என்றும் தானியேலின் உயிர்த்தெழுதலுக்கும், மூப்பரான பாத்திரவானாக வெகுமதியளிக்கப்படுவதற்கும் சற்று முன்பு அதின் முடிவு இருக்கும் என்று நமக்கு போதிக்கிறார். இது இன்னும் நடந்தேறவில்லை. **"நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு, நீ இளைப்பாறிக் கொண்டிருந்து நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப் பாய்."** (தானி. 12:13).

உலக சரித்திரத்தில் 1914 ஒரு முக்கியமான திருப்புமுனையாக இருந்த போதிலும், இது தெளிவாக முடிவு காலத்தின் முடிவை குறிக்க வில்லை, ஏனெனில் முடிவுகாலம் இந்த உலகத்தின் ராஜ்யங்கள் மற்றும் போப்பு மார்க்கம் உட்பட பாபிலோனின் முழுமையான கவிழ்த்துப் போடுதலைக் கண்டிருக்க வேண்டும். **"அதன் பின்பு அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான், அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.** (பரோஷியா அல்லது வந்திருத்தல்)" (2 தெச. 2:8). இந்த பாடம் அந்திக் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற துன்மார்க்க அமைப்பு அப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதைப் பற்றி பேசுகிறது; கிரேக்க பாஷையில்: அப்போ காலிப்டோ, அவருடைய வாயின் சுவாசத்தினாலே திறந்து காட்டுவது. ஆம் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் பாபிலோனின் தவறான போதனைகளை ஒரு பக்கம் தொடர்ந்து ஒதுக்கி வைக்கவும், ஏற்ற காலத்தில் சத்திய வசனம் துணிகரமான பாவிகள் அனைவரையும் அவருடைய போதனைகளுக்கு, அவருடைய கட்டளைக்கு, அவருடைய போதனைகளுக்கு செவி கொடுக்காத

*(கீழ்ப்படியாத)* எல்லோரையும் அழித்துவிடும்! ஆ, இந்த பாட வசனம் தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைக்கு எந்த வழியில் வெளிச்சம் வருகிறது என்பதைப் பற்றி நமக்குச் சொல்கிறது. கிரேக்க பாஷையில் எபிபெனியா அல்லது பிரகாசிக்கும் வெளிச்சம் தெளிவான வெளிப்படுதல்; வெளிச்சமும், அறிவும் அதிகரிப்பதால், தப்பறை மற்றும் தீமையின் எல்லா வடிவங்களும் வந்திருக்கும் ஒருவரின் (நமது கர்த்தர்) தொடர்ந்து பிரகாசிக்கும் வெளிச்சத்தால் அகற்றப்படும். "**ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?**" *(1 தீமோ. 3:5).* வெளி. *16:18-20; 18:21*-ஐயும்கூட பார்க்கவும்.

அத்துடன் இது தொடர்பாக நாகூம் தீர்க்கதரிசனம் *(1:5-9)* மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது. "**அவர் சமுகத்தில் பர்வதங்கள்** *(அதிக எதேச்சதிகார அரசாங்கங்கள்)* **அதிர்ந்து மலைகள்** *(குறைந்த எதேச்சதிகார அரசாங்கங்கள்)* **கரைந்து போகும், அவர் பிரசன்னத்தினால் பூமியும்** *(தற்காலத்திய சமுதாய ஒழுங்கமைப்புகள்)* **பூச்சக்கரமும், அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்** *(அழிக்கப்படும்).* **அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிர கோபத்தில் தரிப்பவன் யார்? அவருடைய எரிச்சல்** *(உக்கிர கோபம்)* **அக்கினியைப் போல** *(அவருடைய கோபத்தின் அக்கினி எசே. 38:20; செப். 3:8)* **இறைக்கப்படுகிறது. அவராலே கன்மலைகள்** *(சமுதாய கோட்டைகள்)* **பேர்க்கப்படும். கர்த்தர்** *(யேகோவா)* **நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை** *(சாத்தானுடைய சாம்ராஜ்யம்)* **புரண்டு வருகிற வெள்ளத்தினால்** *(சத்தியமாகிய ஜலப்பிரளயத்தினால்)* **சர்வ சங்காரம் பண்ணுவார், இருள்** *(அறியாமை மற்றும் தப்பறை)* **அவர் சத்துருக்களைப் பின் தொடரும், நீங்கள் கர்த்தருக்கு** *(யேகோவா)* **விரோதமாகச் செய்ய நினைக்கிறதென்ன** *(திட்டமிடுவது)? (சங். 107:42 உடன் ஒப்பிடுக.)* **அவர்** *(அக்கிரமத்தை)* **சர்வ சங்காரம் பண்ணுவார்: இடுக்கம் மறுபடியும் உண்டாகாது.**" அது ஒரேமுறை ஆதாமின் கீழப்படியாமையால் வந்தது. *(ரோம. 5:12,18).* ஆனால் அது அழிக்கப்பட்டபின்பு மனுக்குலம் இழந்ததை மீட்டளித்து, இந்த பூமி பூரணமாக்கப்பட்டு, துன்மார்க்கர் அனைவரும் அழிக்கப்படுவார்கள். *(சங். 145:20)* அது ஒருபோதும் மீண்டும் எழும்பாது.

இந்த மகா உபத்திரவ காலத்தில், "**சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்தினால்,**" *(வெளி. 16:14)* முழு உலகமும் அந்த புதிய நாளுக்காகவும், அதன் மகாப்பெரிய இழந்ததை மீட்டளிக்கும் வேலை அல்லது இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் வேலைக்காகவும் ஆயத்தப்படுத்தப்பட்டு வருகிறது. *(அப். 3:19-21; செப். 3:9; ஏசா. 11:9; எரே. 31:34)* விழித்தெழும்பும் வேளையானது மேகமும் மந்தாரமுமாயிருப்பினும் *(சங். 97:2).* அந்த அழிவின் வேலை நடக்கும் காலம் குறுகிய ஒன்றாக இருக்கும் என்ற அவருடைய ஆசீர்வாதமான உறுதிமொழிக்காக தேவனுக்கு நன்றி - "**கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்.**" *(ரோம. 9:28; மத். 24:22)* - மேலும் அதன் பிறகு உடனடியாக மகிமையான நீதியின் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கும். *(மல். 4:2; 1:11).* "**தேசம்** *(தற்காலத்திய சுயநலமான சமூக ஒழுங்குகள்)*.......... **ஒரு குடிலைப் போல பெயர்த்துப் போடப்படும் ...... அது விழுந்துபோம், இனி எழுந்திராது.**" *(ஏசா. 24:19,20).* மனுஷனுடைய மிஞ்சும் கோபத்தை தேவன், தம்மைத் துதிக்கும்படி உபயோகிக்கிறார். *(சங். 76:10; யோவே. 2:1-11; ஆபகூ. 1:5-12),* அது கட்டிட இடிபாடுகளை அப்புறப்படுத்தி புதிய கட்டிடத்திற்கு வழி உண்டாக்குகிறது. "**நீதி வாசமாயிருக்கும் புதிய வானங் களும்** *(ஆவிக்குரிய புதிய அதிகார வல்லமை -ராஜ்ய அதிகாரத்தில் இயேசுவும், அவருடைய சபையும்)* **புதிய பூமியும்** *(மீண்டும் ஒழுங்குபடுத்தப்பட்ட மனித சமுதாயம்)* **உண்டாகும்.**" *(2 பேது. 3:13; ஏசா. 65:17).*

தேவனுடைய திட்டத்தின் இந்த கால கட்டத்தில் நாம் இந்த கோட்பாட்டின் அதிக ஆழமான அறிவை அடைந்து கொள்ள இயேசுவையும், அவருடைய சபையையும் கருத்தில் கொள்வோமாக. தேவன் தம்மிடத்தில் உண்மையுள்ள ஜனங்களிடமிருந்து, அவர்கள் அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும்சரி, அல்லது அவருடைய பிரதிஷ்டை செய்த ஆவியினால் பிரகாசிக்கப்பட்ட ஆனால், பரம அழைப்புக்குரிய காலத்திலிருந்தும், அதற்கு முந்தின காலத்திலிருந்தும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத ஊழியக்காரர்கள் மற்றும் சிநேகிதர்களாயிருந்தாலும் சரி, அவர்களிடமிருந்து தம்முடைய தயவை ஒருபோதும் அகற்ற மாட்டார் என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். (இது PT'68, p 44-46-ல் காட்டப்பட்டுள்ளது). நிறைவேறுதலான பிரகாரத்திலிருக்கிற வாலிபரான பாத்திரவான்களும், நிறைவேறுதலான பாளையத்திலிருக்கிற பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களும் இப்போது விசுவாசத்தின் மூலம் தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்டு, "தேவனுடன் சமாதானத்தையும்," "தேவ சமாதானத்தையும்" பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எபிபெனி விசுவாச வீட்டாராயிருந்து, தேவனுடைய சிநேகிதர்களும், குமாரர்களாகும் நம்பிக்கையுள்ளவர்களாக, அவருடன் ஐக்கியம் கொண்டவர்களாகவும், அவரைத் தங்கள் பிதாவாக நம்பி அவரை நோக்கி ஜெபிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் புதிய உடன்படிக்கையின் கீழாகவும், அதன் மத்தியஸ்தர் கீழாகவும் வரும்போதும், அவர்கள் விசுவாசத்தால்

நீதிமானாகுதலுக்கு பதிலாக கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதலின் கீழ்வரும் போதும், தேவனுடன் இந்த ஆசீர்வாதமான ஐக்கியங் கொள்ளுதலை அவர்கள் இழந்துவிடுவார்களா? நிச்சயமாக இல்லை!

பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக் காரர்களைத் தேவன் மேலான வகையில் கனப்படுத்துவார், ஏனெனில், அவர்கள் பொது வான இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலை பெறும் வகுப்பார் பெறப் போவதைக் காட்டிலும் பெரிதான சோதனைகளின் கீழ் தங்களை உண்மையுள்ளவர்களென்று நிரூபிக்கிறார்கள். அவர்கள் பாத்திரவான்களின் விசேஷித்த உதவியாளர்களாக இருக்கும்படியாக சிலாக்கியம் பெற்றிருப்பார்கள். அத்துடன் மனுக்குலத்தாருடன் பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்வதால், அவர்களுக்கு மிகத் திறமையாக உதவி செய்பவர்களாகவும் இருப்பார்கள். இயல்பாக எழுகிற கேள்வி என்னவெனில், பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் நடைமுறை ஒழுங்குகளைத் தொடர்ந்து செய்வார்களா? ஆமாம், அப்படிப்பட்ட நடைமுறை ஒழுங்குகளைத் தொடர்ந்து செய்வது மிகவும் தகுதியான தாயிருக்கிறது. கிறிஸ்துவின் தலைமைத்துவம் மற்றும் சபையின் சரீரத்துவத்தின் அடையாளங்கள் பிரதானமாக ஈடுபட்டிருக்கும்போது, அதே கோட்பாடு தேவனுடைய தற்கால பிரதிஷ்டை செய்த ஜனங்களடங்கிய எல்லா எக்லீஷியாக் களுக்கும் பொருந்துகிறது, எப்படியெனில் அவர்கள் எல்லாரும் விசாலமான கருத்தில் சபையின் எக்லீஷியாவின் (அழைக்கப்பட்டவர்கள்) அங்கங்களாயிருக்கிறார்கள். சிறுமந்தையினரைத் தவிர மற்றவர்களும்கூட நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடன் திருமண உறவில் இருப்பதை நாம் மறக்கக்கூடாது. போவாசுடனான திருமண உறவில் ரூத் ஆதியிலிருந்த வாலிபரான பாத்திரவான்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடன் உருவக அடையாளமான திருமண உறவில் அடையாளப் படுத்துகிறார். (ரூத். 4:10-13; E-4, para 394,395). ஆவியினால் பிரகாசிக்கபட்டவர்கள் எல்லாரும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்தவர்கள் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் தலைமையின்கீழ் இருக்கிறார்கள், மேலும் அவர்கள் அவருக்குப் போதிப்பது உரிமை என்று எண்ணாமல் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளும் தங்கள் சிலாக்கியத்தில் களிகூருகிறவர்களாக இருக்க வேண்டும்.

இயேசுவும் அப்போஸ்தலர்களும் போதித்த பத்து கற்பனைகள் பற்றிய ஆழ்ந்த அர்த்தம், மலைப் பிரசங்கத்திலுள்ள மற்ற காரியங்கள், (மத். 5:1-12), திருமண உறவு மற்றும் விவாகரத்து பற்றியவை (மத். 19:1-9) மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தல், (அப். 14:23; தீத்து 1:5), சகோதரிகள் எக்லீஷியா கூட்டங்களில் தலையை முக்காடிடுதல் மற்றும் எக்லீஷியா உபதேச கூட்டங்களில் அவர்கள் போதிக்கக்கூடாது போன்றவை, சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தாருக்கு பொருந்தியது போல அதே வகையில் யுகங்களுக்கு இடையே பிரதிஷ்டை பண்ணினவர்களுக்கும் பொருந்துகின்றன. யுகங்களுக்கிடையே, பிரதிஷ்டை செய்கிற கிறிஸ்துவின் சீஷர்கள், இந்த உபதேசங்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் பொருந்துகின்றன என்றும், தங்களுக்குரியதல்ல என்றோ, அல்லது அவை தங்களுக்கு குறைந்த வகையில் மட்டுமே பொருந்துகிறது என்றோ எண்ண வேண்டியதில்லை. ஆயிர வருட யுக அரசாட்சிக்கு முந்தைய ஆபிரகாமுடைய சந்ததியார் எல்லாருக்கும், பிரதிஷ்டையில் ஒரே ஒரு வகைமட்டுமே இருக்கிறது - அது தேவனுக்கு முழுமையாக பிரதிஷ்டை செய்வது, அவருடைய சித்தத்தை மட்டும் செய்வது- மற்றும் அப்படிப்பட்ட பிரதிஷ்டையை செய்கிறவர்களும், காத்துக் கொள்கிறவர்களும் மட்டுமே ராஜ்யத்தில் நிறைவேறுதலான லேவியர்களாகவும், நிதினீமியர்களாகவும், அனுகூலமான ஸ்தானங்களைப் பெற்றிருப்பார்கள். PT'82,p94.

ரஸல் போதகர், மனுக்குலத்திலிருந்து பொதுவாக இரட்சிக்கப்படும் இரண்டு வகுப்பாரைப் பற்றி, அதாவது தெரிந்தெடுப்புக்குட் பட்டவர்கள், மற்றும் தெரிந் தெடுப்புக்குட் படாதவர்கள் என்றும், இந்த வகுப்பார்கள் வேத வாக்கியத்தின்படி மேலும் பல வகுப்பார்களாக பிரிக்கப்படுவார்கள் என்றும் போதித்தார். உ.ம். அதாவது மனுக்குலத்தாரிலிருந்து மூன்று இரட்சிக்கப்பட்ட வகுப்பார்கள் இருக்கின்றனர்; சிறுமந்தை, தெரிந்தெடுக்கப் பட்டவர்களில் மீதியானவர்கள் மற்றும் தெரிந்தெடுக்கப் படாதவர்கள்; இவர்கள் முறையே வாசஸ்தலம், பிரகாரம் மற்றும் பாளையத்தில் சித்தரித்துக் காட்டப்படுகின்றனர். (T 25-27; R 4579, R 4580, R 4875, R 4876).

மனுக்குலத்தாரிலிருந்து இரட்சிக்கப்பட்ட ஆறு வகுப்பார்களைச் சுட்டிக் காட்டும்போது, PT'69, பக்.14-வ் நாங்கள் பட்டியலிட்ட இரட்சிக்கப்பட்ட வகுப்பார்களில் பல்வேறான பிரிவுகளில் எதையும் ஜாண்சன் போதகர் மறுக்கவுமில்லை நீக்கவு மில்லை. அவருடைய போதனைகள் அவற்றில் ஒவ்வொன்றுடனும் இசைவோடிருக்கின்றன, பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் வகுப்பும் அவற்றில் அடங்கியிருக்கிறது. ஏனெனில்




"பிரதிஷ்டையானது எப்போதுமே ஒரு ஒழுங்கு வரிசையில் இருக்கிறது" என்பதைக் காட்டுவதின் மூலமாகவும் (E-4, p420)அத்துடன் (உ.ம் E-10-ல் பக்.114 மற்றும் E-11, பக்.473), "1954-க்கு பிறகு வாலிபரான பாத்திரவான்களாக எவரும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள்," ஏனெனில் அப்போது, "எபிபெனி பாளையம் அமைப்பு உருவாகும். அவர் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் வகுப்புக்கு தேவையானவைகளைச் செய்தார். ஆயினும் "**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.**" (நீதி. 4:18) வாலிபரான பாத்திர வான்கள் பற்றிய சத்தியம் ரஸல் போதகருடைய நாளுக்குப் பிறகு தொடர்ந்து திறக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது போலவே ஜாண்சன் போதகருடைய நாள்முதற்கொண்டே பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் பற்றிய சத்தியமானது தொடர்ந்து திறக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. (PT-Q புத்தகம் பக்.205). "**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்**" (1 பேது. 5:7) என்ற வசனத்திற்கிணங்க பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் தேவனுக்குள் இளைப்பாறுகிறார்கள்.

சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் ஆகிய இந்த ஐந்து திரும்பக் கொடுத்தலுக்கு முற்பட்ட பிரதிஷ்டை செய்த வகுப்பார்களையும் தேவன் முறையே சீயோன், மோரியா, ஆக்ரா, பெசிதா மற்றும் ஓபேல் மூலமாக அடையாளப்படுத்தி இவர்கள் அனைவரையும் - பரிசுத்த பெரும் பாதையில் தெரிந்து கொள்ளப் படாதவர்களுக்கு உதவி செய்யும் விசேஷித்த கருவிகளாக்குவார், யேகோவா ஜனங்களுக்குத் தம்முடைய கட்டளைகளையும், வழிகளையும் போதிப்பார், அவர்கள் அவருடைய சத்தியம் மற்றும் நீதியின் பாதைகளில் நடப்பார்கள்; "**இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.**" (ஏசா. 2:2-4). களிப்புடன் அவர்கள், "**பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள். அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப் பண்ணுகிறார். வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்.** (இராணுவ ஆயுதங்கள் அழிக்கப்பட்டுவிடும்); **இரதங்களை** (இராணுவ வாகனங்கள் - இராணுவ டாங்கிகள் முதலியன)**நெருப்பினால் சுட்டெரிக்கிறார்**" என்று சொல்வார்கள். தேவன் பூமிக்கு சமாதானமுள்ள ஆட்சியைக் கொண்டுவருவார்: "**நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள், ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்**" (சங். 46:8-10; 107:28-30). இதுவே பூமியின்மீது வருகிற தேவனுடைய ராஜ்யம். அதற்காக நாம் இப்போதும் ஜெபிக்கிறோம். (மத். 6:10).

1932-ல் எழுதப்பட்ட ஒரு அழகான துதிபாடல் சொல்கிறது. "அருமையான கர்த்தாவே, என் கரத்தைப் பிடித்து, என்னை வழிநடத்தி என்னை நிலை நிற்கச் செய்யும், நான் களைத்திருக்கிறேன், நான் பலவீனன், நான் சோர்ந்து விட்டேன்; புயல் மற்றும் இரவினூடே வெளிச்சத்திற்கு நேராக என்னை நடத்தியருளும்." இந்த உபத்திரவ காலத்தின்போதுள்ள அனுபவங்கள் என்னவா யிருந்தாலும், அவர்கள் இயேசு மற்றும் பரம பிதாவின் கரங்களில் (அன்பு மற்றும் பரிபாலன பாதுகாப்பில்) இருக்கிறார்கள் என்பதை கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதினால் ஒருவனும் அவர்களை அந்த கரங்களிலிருந்து பறித்துக் கொள்ள முடியாது. (யோவா. 10:27-29). "**நீதிமானுக்கு ஒரு கேடும் வராது.**(நீதியுள்ளவன்)" (நீதி. 12:21). கிறிஸ்துவின் மூலமாக தங்கள் ஜீவியங்களை தேவனுடைய பராமரிப்புக்கு ஒப்படைத்திருக்கிறவர்கள் தங்கள் ஜீவியங்களை அவருக்கு அர்ப்பணித்திருப்பதால் அவருடைய ஜனங்கள் எல்லாரும் மகிழ்ச்சி யாயிருக்கிறார்கள். அவர்கள், "**கர்த்தர் என் மேய்ப் பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்**" (சங். 23:1) என்று மெய்யாகவே சொல்ல முடியும். "**அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்படி**" அவர் செய்கிறார். (ரோம. 8:28).

நாம் தேவனுக்கு சொந்தமான ஜனமாக, நமக்கான அவருடைய மகாப் பெரிய ஞானம், நீதி,



வல்லமை, அன்பு, பராமரிப்பு ஆகியவற்றில் எப்பொழுதும் களிகூருகிறவர்களாகவும், நமக்கு இருக்கிறவைகள் போதும் என்ற எண்ணத்துடனும் இருக்க வேண்டும்; ஏனெனில் அவர் தாமே - "**நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை: உன்னைக் கைவிடுவதுமில்லை**" என்று சொல்லியிருக்கிறார். அதனால் தைரியமாக திட நம்பிக்கையுடன் நாம், "**கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?**" என்று சொல்லலாம். *(எபி. 13:5,6 டயக்லாட்).* இயேசு நம்மிடம், "**ஆத்துமாவைக் (**மீண்டும் ஜீவிக்கும் உரிமை**) கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லு கிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்: ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே** (கெஹன்னா - இரண்டாம் மரணத்தில் - அதாவது முழுமையான, பூரணமான நித்திய அழிவு) **அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்** (பயபக்தி என்ற கருத்தில்)" *(மத். 10:28)* என்று சொல்லியிருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு வையப்பட்டு, அவதூறு செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, இறுதியாக சிலுவையில் அறையப்பட்டாலும்கூட, சகலத்தையும் அவருடைய நன்மைக்கேதுவாக நடப்பிக்கச் செய்த அன்பான அதே பரம பிதாவானவர் இயேசுவின் சீஷர்களாக இருக்கிற எல்லாரையும் இப்போதும் பராமரிக்கிறார்; அதனால் நாம் நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டால் பாக்கியவான்களாயிருக்கிறோம். *(மத். 5:10-12; மாற். 10:29,30; லூக். 6:22,23; யோவா. 15:20,21; 2 கொரி. 4:17,18).*

"**ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கி யிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம்** (அதில் சிலவற்றை மாத்திரமல்ல) **அவர் மேல் வைத்துவிடுங்கள்.**" *(1 பேது. 5:6,7).* இது நம்முடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் குறித்து அக்கறையில்லாமலும், சிந்திக்காமலும், கவனமில்லாதவர்களுமாக இருக்க வேண்டுமென்பதை அர்த்தப்படுத்தவில்லை. நாம் அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வருவதைத் தடுப்பதற்காகவே அப்போஸ்தலன் (வச. 8) "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித் திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்" என்று தொடர்ந்து கூறுகிறார். நாம் இந்த காரியத்தில் அக்கறை இல்லாமலோ அல்லது அலட்சியமுள்ளவர்களாகவோ இருப்போமானால், நிச்சயமாகவே மிகப்பெரிய நஷ்டத்தை அனுபவிப்போம். "**ஆனபடியினாலே, நீங்கள் ..... ஞானமுள்ளவர்களைப் போல** (எல்லாவற்றிலும்) **கவனமாய்** (ஜாக்கிரதையாய்) **நடந்து கொள்ளப் பாருங்கள்**" *(எபே. 5:15).* நாம் நம்முடைய வார்த்தைகள், நம்முடைய செயல்கள், அத்துடன் நாம் செய்ய வேண்டிய எல்லாவற்றைக் குறித்தும் அதிக ஜாக்கிரதையையும், ஆழ்ந்த சிந்தனையையும் பயிற்சி செய்ய வேண்டியது அவசியமாகிறது. நம்முடைய பாட வசனம் நமக்கு சொல்வது என்னவெனில்: *உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்!!*



கவலைப்படுதல் ஒருபோதும் நாளைய தினத்தின் வருத்தத்தை பறிக்காது, அது இன்றையதினத்திற்கான பெலனை உறிஞ்சிவிடும்.

நியாயமான ஒரு கேள்வி என்னவெனில்: அப்படியானால் நம்முடைய பாடத் தலைப்பு வசனத்தில் கவலை என்பது எதைக் குறிக்கிறது? இது தேவனுடைய ஊழியத்தை நாம் செய்வ திலிருந்து நம்மைத் தடுக்கக்கூடிய நம்முடைய வருத்தங்கள் மற்றும் விசாரங்கள் எல்லாவற்றின் பாரமாயிருக்கிறது, அது கர்த்தருக்குள்ளான நம்முடைய சமாதானத்தை நம்மிடமிருந்து பறித்துக் கொள்ளும். நம்முடைய கவலைகள் என்பவை, நம்மை சோதிக்கிற காரியங்களான நஷ்டங்கள், ஏமாற்றங்கள், தாமதங்கள், தடைகள், பொறுப்பு கள், குறைவுகள், நம்முடையதும் மற்றும் மற்றவர்களுடையதுமான பலவீனங்கள், தோல்வி கள், வேறுபாடுகள், இன்னல்கள், தனிமைப் படுத்தல்கள், பிரிவினைகள், கொழித்தல்கள், தேவைகள், எதிர்ப்புகள், வியாதி, சோர்வு, வேதனை, துயரம், நம்பிக்கை துரோகங்கள், அடக்குமுறைகள், துன்பங்கள் முதலியனவாகும். அவற்றின் இயல்பான போக்கு நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களின் கவனத்தை உறிஞ்சி எடுத்துக்கொண்டு, அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்துவதாகும். நாம் நம்முடைய காரியங்களில் மெச்சத்தக்க வகையில் ஜாக்கிரதை யாயிருந்து, எல்லாமே நம்மை சார்ந்துதான் உள்ளது என்பது போல நடந்தாலும், சகலமும் தேவனையே சார்ந்திருக்கிறது என்பதை மனப்பூர்வமாக நம்புவோமாக! நம்முடைய பங்கு தளராத ஊக்கத்தை பயிற்சி செய்வது, அவருடையதோ பாதுகாத்து வருவதாகும். அவருடைய காரியங்களை நிறைவேற்றுவதில் அவர் உண்மையுள்ள வராயிருக்கிறார், மேலும் நமக்கு உதவி செய்பவராக பராமரிப்பவராக, அவர் நம்முடைய நலன்களுக்காக எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்துகிறார். எனவே நாம் நம்முடைய நலன்களையெல்லாம் அவரிடம் பொறுப்பாக விட்டுவிடுவது நல்லது.

| | |
|---|---|
| சரியான காரணங்களுக்காக சரியான காரியங்களைச் செய் மத். 6:1-4,5-8 | உன்னுடையதற்காக அல்ல தேவனுடைய காரியத்துக்காக ஜெபி மத். 6:9-13 |
| மற்றவர்களை மன்னத்துவிடு மத். 6:14-15 | அநித்தியமானவைகளுக்கல்ல நித்திய காரியங்களுக்கு முதலிடம் கொடு மத். 6:19-24 |
| கவலைப்படாதே மத். 6:25-31 | முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடு மத். 6:33-34 |
| மற்றவர்களை நியாயந்தீர்க்காதே மத். 7:1-5 | ஏதாவதொன்றைப் பெற விரும்பினால் கேட்டுக் கொண்டேயிரு மத். 7:7-11 |
| உறுதியாய் நிச்சயித்துக் கொண்டவைகளில் உண்மையுடன் நிலைத்திரு மத். 7:13-20 | தேவனுக்குக் கீழ்ப்படி மத். 7:21-27 |

நம்முடைய பாட வசனம், நாம் நம்முடைய கவலைகளையெல்லாம் வைத்துவிட வேண்டிய ஒருவராக தேவனைச் சுட்டிக் காட்டுகிறது, மேலும் இது மற்ற வேத வாக்கியங்களாலும் உறுதிப்படுத்தப் படுகிறது. உதாரணத்திற்கு: **“உன் வழியைக் கர்த்தருக்கு (யேகோவா) ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.”** *(சங். 37:5).* **“கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.”** *(சங். 55:22).* **“உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி** (தேவனுடைய சித்தத்திற்கு உன்னுடைய செயல்களை சமர்ப்பி) **அப்பொழுது உன் யோசனைகள்** (அவருடைய சித்தத்திற்கு இசைந்துள்ள உந்தன் திட்டங்கள்) **உறுதிப்படும்.”** *(நீதி. 16:3).* **“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்** (கவலை வருத்தம், பாரம் நிறைந்தவர்களாயிராமல்) **எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள், அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.”** *(பிலி. 4:6,7).* நாம் இந்த வேத வாக்கியங்களை வாசிக்கும்போதும், மேலும் மத். 6:26-34; லூக். 12:22-31-வரையுள்ள வசனங்களை வாசிக்கும்போதும், இந்த எண்ணத்தை மனதில் வைத்திருக்க வேண்டும். “இதுவரை அதிகமாகவும், அதற்கு மேலாகவும் தேவையான காரியங்களைப் பெறுவதற்காக செலவழிக்கப்பட்ட நம்முடைய எல்லா மிகுதியான காலத்தையும், பெலனையும் பரத்துக்குரிய ஐசுவரியங்களைச் சேர்த்துக் கொள்வதற்காகக் கொடுங்கள்.” இந்த வேத வாக்கியங்கள், நம்முடைய நடக்கையில் கவனமின்றி அல்லது சோம்பலுள்ளவர்களாக இருப்பதற்கு உற்சாகப் படுத்துகிறதாக அல்ல, மாறாக தற்கால ஜீவியத்தில் உள்ள அனைத்துமே எதிர்காலம் மற்றும் நித்தியத்தின் நன்மையுடன் ஒப்பிடப்படும்போது குறைந்த மதிப்புள்ளது என்பதை உணர்ந்து கொள்ள உதவிசெய்வதற்காகவே இருக்கின்றன.

தேவன், “கிறிஸ்து இயேசு மூலமாகவும்,” “கிறிஸ்து இயேசுவைக் கொண்டும்” நம்மைத் தம்முடைய ஜனங்களாக பராமரித்து வருகிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். **“என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”** *(யோவா. 14:6)* என்று இயேசு விவரிக்கிறார். **“பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும், அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்.”** *(யோவா. 3:35; மத். 11:27).* இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர்: **“வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் (வல்லமை) எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது”** *(மத். 28:18)* என்று அறிவித்தார். தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதை இயேசு அறிந்ததினால், *(யோவா. 13:3; 1 கொரி. 8:6)* **“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது”** *(மத். 11:28-30)* என்று அதிகாரத்துடன் கூற முடிந்தது.

நம்முடைய கவலைகளையெல்லாம் நம்முடைய பரமபிதாவின்மேல் வைத்துவிடும்போது, நாம் மெய்யாகவே தேவனுடைய பிரதிநிதியும் நம்முடைய ஆசீர்வாதத்திற்காக அவர் ஏற்படுத்தியவருமான இயேசுவிடம் வருகிறோம். மேலான கருத்தில் தேவனே நம்முடைய மகாபெரிய மேய்ப்பராயிருக்கிறார், இயேசுவும் நம்முடைய மேய்ப்பராக நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறார். *(யோவா. 10:14; எபி. 13:20; 1பேது. 2:25,; 5:4).* நாம்

அவருடைய ஆடுகளாக அவருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து அவருடைய வழிநடத்துதலை கவனமாகப் பின்பற்றுவோமானால், நாம் கவலை கொள்ளவோ அல்லது பயப்படவோ வேண்டிய தில்லை. நம்முடைய கவலைகள், வருத்தங்கள் மற்றும் பாரங்கள் யாவற்றையும் அவர்மீது வைக்கும்போது, அவர் நம்மைக் குறித்து சந்தோஷப்படுகிறார். கவலையும், வருத்தமும், தங்களையே சார்ந்திருக்கிற, தங்கள் சுய ஞானத்தையும், தங்கள் சுய பெலத்தையும் தங்கள் சுய திறமையையும் சார்ந்திருக்கிறவர்களுக்கு தவிர்க்க முடியாதவைகள். ஆனால் தங்கள் பாரங்களை அவர்மீது வைப்பதற்காக கர்த்தரி டத்தில் வருகிறவர்கள், உலகம் தரக்கூடாததும், எடுத்துக் கொள்ள முடியாததுமான சமாதானத் தையும், இளைப்பாறுதலையும் கண்டு கொள் கிறார்கள். ஆனால் சிலுவையின் அடியில் நம்முடைய பாரங்களை வைத்துவிட்ட பிறகு அவற்றை எடுத்துக் கொண்டு, மீண்டும் சுமக்கிற தவறை நாம் செய்யாதிருப்போமாக.

தேவனுடைய அன்பான பராமரிப்பில் இளைப்பாறுவதற்கு கணிசமான அளவுக்கு ஒழுக்கம் - ஒழுக்கப் பயிற்சி அவசியப்படுகிறது. பெரும்பாலான மக்களுக்கு ஒழுக்கத்தில் விருப்பம் இல்லாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். பெரும்பாலானோர் சந்தோஷம் அடைவதற்கான சுயநலமான ஆசைகளினாலேயே கட்டுப் படுத்தப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. மேலும் அவர்கள் இதையே தங்கள் வாழ்வின் பிரதான குறிக்கோளாக கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அநேக ஜனங்கள் எதிர்பாலர் மீதான விருப்பம், உணவு மற்றும் மதுவின் மீது விருப்பம், பணம் மற்றும் உடைமைகளைச் சம்பாதிப்பதற்கும் அவற்றைத் தக்கவைத்துக் கொள்வதற்குமான விருப்பம், பயணம் செய்வதில் விருப்பம் போன்ற பேராவல்களால் பிரதானமாக கட்டுப்பட்டிருப் பதாகத் தெரிகிறது. இந்த விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாட்களைப்" பற்றிய தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டபடியே, "**மனுஷர்கள் தற்பிரியராயும்........ தேவப் பிரியராயிராமல், சுகபோகப் பிரியராயும்.......**" *(2 தீமோ. 3:1-5)* இருக்கிறார்கள்.

பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள் விஷயத்தில் அப்படியில்லை, (ஒழுக்கப் பயிற்சிக்காக) சிட்சையாக நாம் துன்பங்களை சகிக்கிறோம். "**என் மகனே, கர்த்தருடைய சிட்சையை (ஒழுக்கப் பயிற்சியை) அற்பமாக எண்ணாதே**" *(எபி. 12:5 NASV)* என்ற தேவனுடைய அழைப்பை நாம் ஏற்றுக் கொள்கிறோம். நமக்கு கடமைகளும், பொறுப்புகளும் இருக்கின்றன. அதோடுகூட தேவனுடைய வார்த்தை (வேதாகமம்) போதிப் பதைப் பின்பற்ற பயபக்தியுடன் செய்த பொருத்தனையும் நமக்கிருக்கிறது. "**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்.**" *(மத். 6:33).* நாம் நம்முடைய திருமணம் சார்ந்த பொருத்தனைகளையும் (உறுதிமொழிகள்) நாம் பெற்ற நம்முடைய பிள்ளைகளைப் பேணிப் பாதுகாக்கும் பொருத் தனைகளையும்கூட பெற்றிருக்கிறோம். நாம் நம்முடைய பாலுணர்வு விருப்பங்கள் நம்முடைய வியாபார நடவடிக்கைகள், உணவு மற்றும் குடிநீர் விஷயங்களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்கிறோம். வியாபார நடவடிக்கைகளில் நியாயமான கோட்பாடுகள் அடிக்கடி உலகத்தாரால் புறக்கணிக்கப்படுகிறது. "சந்தர்ப்ப ஒழுக்க நெறிகள்" மூலம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிற அநேக ஜனங்கள் நீதி மற்றும் சட்டத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு அவைகளுக்கு மாறாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி எந்த வழியையாவது பின்பற்றி நடக்கிறார்கள்.

இதே உலகத்தில், அநேகர் கொஞ்சமாகவோ அல்லது எவ்விதத்திலும் ஒழுக்கநெறி கட்டுப் பாடில்லாமல் நடக்கிறார்கள். கிறிஸ்தவர்கள், தேவன் மற்றும் கிறிஸ்துவின் ஒழுக்கப் பயிற்சிக்குக் கட்டுப்பட்டு, நடக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவருடைய சீஷர்களாகிய நம்மிடம், இயேசு, "**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**" *(மத். 5:13; கொலோ. 4:6 உடன் ஒப்பிடுக)* என்று கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால், நாம் பாதுகாக்கிற சுத்திகரிக்கிற, பக்குவப்படுத்துகிற நடவடிக்கைகளை நம்மைச் சுற்றிலுமிருக்கிற மற்றவர்கள் மீது நடைமுறைப்படுத்த வேண்டும். "**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்**" என்றும்கூட அவர் சொல்கிறார் *(மத். 5:14).* தேவனுக்கு மகிமையுண்டாக நாம் நம்முடைய வெளிச்சத்தை பிறர் முன்பாக பிரகாசிக்கச் செய்ய வேண்டும். *(வச.16).* தேவன், அப்போஸ்தலர் பவுலின் மூலமாக*(பிலி. 2:15,16; ASV-யுடன் ஒப்பிடுக).* "**ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள் கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளை களுமாயிருக்கும்படிக்கு** (கண்டிக்கப்படுவதற்கு நம்மில் நியாயமான காரணம் எதுவும் இல்லாதபடி) **நடந்துகொள்ளுங்கள்**" என்று கூறியிருக்கிறார்.

தேவனுடைய உண்மையான பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக இருப்பதன் மூலமாக, நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இளைப் பாறுகிறோம் - அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவர் பெலனும் திறமை யுமுள்ளவர்; நம்மை அழைத்திருக்கிறவர் அவருடைய நல்ல வார்த்தையை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கி

றோம். இந்த சமாதானம் அல்லது இளைப்பாறுதல் பரிசுத்தாவியின் விசேஷித்த ஆசீர்வாதமாகும். நாம் பரிசுத்த ஆவியை தேவனுடைய பரிசுத்த சிந்தையை, பரிசுத்தமான மனநிலையை பெற்றுக் கொள்கிற அளவுக்குத்தக்கதாக மட்டுமே இந்த சமாதானத்தின் நிறைவை நம்மில் பெற்றிருப்போம். இது எளிய விகித அளவிலான காரியமாகும். நாம் கிருபையிலும், தேவனை அறிகிற அறிவிலும், சத்திய அறிவிலும், அதன் ஆவியிலும் வளர்ச்சியடைவதற்குத்தக்கதாக பரிசுத்த ஆவி நம்மை ஆறுதல் படுத்தவும், பலப்படுத்தவும் வகையில் அதைப் பெற்றிருப்போம். அத்துடன் நாம் அனுதினமும் தேவனுடைய சமாதானத்தையும் அதிகமாகப் பெற்றிருப்போம். மேலும் அவருடைய அன்பில் வளர்ந்தோங்கவும், நிலைத்திருக்கவும் கூடியவர்களாயிருப்போம்.

“**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**” *(தேவனுடைய அன்பான பராமரிப்பில் இளைப்பாறுதல்) (1 யோவா. 5:4)* என்று நமக்கு போதனையாகவும், ஆறுதலாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த விசுவாசமானது நிலையான அஸ்திபாரமாகிய தேவனுடைய வார்த்தையின் சாட்சியத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது. - பலமான தடுமாற்றமில்லாத விசுவாசத்தைக் காத்துக் கொள்வதின் மூலமாக மட்டுமே தேவனுடைய சமாதானம் அவருடைய பிள்ளைகளுடன் தங்கியிருக்கும். “**உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்:**” “**தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது.**” *(சங். 84:11; ரோம. 8:28).* “**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது.**” *(1 பேது. 3:12).* நாம் நம்முடைய தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்ட மனதுடையவர்களாக, அவருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களுக்கு அவர் தந்திருக்கிற அவருடைய அநேக விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை ஆழ்ந்து தியானித்திருப்போமானால், அவருடைய சித்தத்தை செய்வது மட்டுமே நம்முடைய நிலையான நோக்கமாயிருக்கும்போது அவர் நம்மில் முழுமையான சமாதானத்தையும், நன்மையையும் தந்து பாதுகாத்து, பராமரிப்பதுடன், எல்லா சூழ்நிலைகளிலும் நமக்கு வெற்றியைத் தந்தருளுவார். ***

பைபிள் ஸ்டாண்டர்ட் ஊழியங்களின் (LHMM) முதன்மை செயல் பொறுப்பு தலைவரும் முதன்மை ஆசிரியருமான ரால்ஃப் ஹெர்சிக் போதகர் நீண்ட நாட்கள் சுகவீனத்திற்குப் பிறகு 2016 ஏப்ரல் 5 ஆம் தேதி மரணமடைந்தார். 2013-ல் எழுதி முடிக்கப்பட்ட, அவர் கடைசியாக எழுதிய இந்த கட்டுரையை நாங்கள் இப்பொழுது வெளியிடுகிறோம். அவருக்குக் கொடுக்கப்பட்ட இந்த வேலையில் அவருடைய ஊழியத்துக்காக நாங்கள் தொடர்ந்து நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

# இயேசுவின் மானிட ஜீவனுக்குரிய உரிமைகளைப் பிரயோகித்தல்

*Application of Jesus’ Human Life-Rights*

“**தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே: இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.**” 1 தீமோ. 2:5,6.

“**என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.**” எபி. 2:9.

“**.......ஒருவன் பாவஞ்செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல: சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.**” (1 யோவா. 2:1,2).

சிலர் மேலே சொல்லப்பட்ட வசனங்களை மனதில் வைத்துக் கொண்டு, இயேசு தம்முடைய மானிட ஜீவனை ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததிக்காக மீட்கும் பொருளாக கொடுத்திருந்தாரானால், அவர் ஒரே ஒரு ஜீவனை மட்டுமே கொடுக்க வைத்திருக்கும்போது, சிலுவைக்கு முந்தி தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பரான பாத்திரவான்களுக்கும் கிறிஸ்தவ நேமகத்தின்போது வாழ்ந்த சபைக்கும், நீதிமானாகுதலை எப்படி அருளியிருக்க முடியும்? (ரோம. 6:9; எபி. 10:26) என்று கேள்வி கேட்கின்றனர். இந்த கேள்விக்குப் பதிலளிக்க, நாம் அது சம்பந்தமான வார்த்தை விளக்கங்களையும், மீட்பின் வழிமுறைகளையும்கூட கவனிப்பது அவசியமாகிறது.

மேலே உள்ள தலைப்பு சுட்டிக்காட்டுகிறபடி சாட்டுதல் செய்யப்படுவது, இயேசுவின் மீட்கும்பொருள் பலியின் நன்மைகளை பகிர்ந்து கொடுக்கும் வழிமுறையுடன் சேர்த்ததாகும். சுவிசேஷ யுகத்தில் முதலாவதாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சிறுமந்தையினருக்கும், திரள் கூட்டத்தினருக்கும் சாட்டுதல் செய்யப்பட்டது. மற்றொரு




விதமாக ஆதாமுக்கும் பொதுவான மனுக்குலத்துக்கும் கிறிஸ்துவின் புண்ணியம் பயன்படுத்தப்படுவது ஆயிர வருட யுக வேலையாக எதிர்காலத்துக்குரியதாயிருக்கிறது.

"புண்ணியம்" என்றால் என்ன? சில நேரங்களில் அது இயேசுவின் மீட்கும் பொருள் புண்ணியமாக குறிப்பிடப்படுகிறது. இது மனித குலத்தின் வரலாற்றுக் குறிப்பில் மிகச் சிறந்த வெகுமதியாகும், இயேசு உலகத்தின் இரட்சகராக, கல்வாரி சிலுவையில் மரணத்தின்மூலம் அதை சம்பாதித்தார். நீங்கள் அதை விலைக்கு வாங்க முடியாது, அது விற்பனைக்குரியதல்ல. அதைப் பெற்றுக் கொள்ளத் தேவையானவைகளை நிறைவேற்றுகிறவர்கள் அனைவருக்கும் அது இலவசமாக அருளப்படுகிறது.

## மீட்கும் பொருளின் பல்வேறு அம்சங்கள்

மீட்கும் பொருள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, பாவம் செய்வதற்கு முன்பு இருந்த பூரண ஆதாமுக்கு மிகவும் சரிநிகரான ஒரு நபர் தேவையாயிருந்தது. ஆகவே அந்த நபர் பாவத்தால் சபிக்கப்பட்ட ஆதாமின் சந்ததியின் மத்தியிலிருந்து வந்தவராயிருக்க முடியாது, ஏனெனில், "**எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்க ளானார்கள்.**" (ரோம. 3:10,23). பரலோகப் பிதா ஆவிக்குரிய சிருஷ்டியிலிருந்து மனிதனாவதற்கு முந்திய நிலையில் லோகாஸாயிருந்த நமது கர்த்தராகிய இயேசுவைத் தெரிந்து கொண்டார். லோகாஸ் தேவனால் நேரடியாக முதலாவது சிருஷ்டிக்கப்பட்ட ஒரே சிருஷ்டி யாவார். பிந்திய சிருஷ்டிப்புகள் அனைத்தும் லோகாஸா யிருந்த இயேசுவின் கரத்தால் சிருஷ்டிக்கப்பட்டவைகள். (யோவா. 1:3) நல்ல தூதர்களில் எவரேனும்கூட இந்த பணிக்குத் திருப்தியானவர்களாயிருந்திருக்கலாம். ஆனால் தேவன் இந்த வாய்ப்பை அவருடைய "ஒரே பேறான குமாரனுக்கு" கொடுத்தார். இந்த மகிமையான தூதனாயிருந்தவரே மீட்கும் பொருளாகும் நோக்கத் திற்காக பூமிக்கு வந்தார். அதனால்தான் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து, "**அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும்** (ஆவிக்குரிய சுபாவமுள்ள வராயிருந்தும்) **உங்கள் நிமித்தம் தரித்திரரானார்.**" (கீழான மானிட சுபாவத்தில் வந்தார்) (2 கொரி. 8:9) என்று கூறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு, இயேசு ஆவிக்குரிய பிரதேசத்திலிருந்து மானிட ஜீவியான மாற்றத்தை அனுபவித்தார். தேவன் லோகாஸ்-ஸின் (Logos) உயிருண்டாக்கும் ஜீவ தத்துவத்தை எடுத்து, கன்னிகை யான மரியாளின் கர்ப்பத்துக்கு மாற்றினார். அதன்பின் மானிட சுபாவத்தை ஜெநிப்பிக்கும் முறைப்படி, ஒன்பதே மாதங்களில் அழகான, பூரணமான ஆண் குழந்தை பிறந்தது, "**அவருக்கு இயேசு என்று பேரிட்டார்கள்.**" (மத். 1:21). வேதாகமம் இயேசுவை "**பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவர்**" என்று சுட்டிக்காட்டுகிறது. (எபி. 7:26). அவர் ஒரு பூரணமான குழந்தையாக, இளைஞனாக, மனிதனாக வாழ்ந்து, முப்பதாவது வயதில் நாசரேத்தில் தமது ஜீவியத்தை தேவனுக்குப் பிரதிஷ்டை செய்தார். பின்பு அவர் யோர்தா னுக்குப் பிரயாணப்பட்டு, அங்கே தமது பிரதிஷ்டைக்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெற்றார். அதன்பின் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் அவர் மீது வந்தது. இந்த இரண்டு செயல்கள் மூலமாக, அவர் தமது பூரணமான மானிட ஜீவியத்தைத் தேவனுக்கு ஒப்புவித்தார். மூன்றரை வருடங்களுக்குப் பிறகு, அவருடைய ஊழியமும், மீட்கும் பொருளான பலியும், சிலுவையில் வெற்றிகரமாக முடிந்தது. சிலுவையில் அவர் கூறிய கடைசி வார்த்தை "**முடிந்தது**" என்பதாகும். (யோவா. 19:30).

## இரண்டு நிலைமைகளில் ஜீவனுக்கான உரிமை

நம்முடைய கர்த்தர் ஒரு மானிட ஜீவியாக மரித்த பிறகு, அவருடைய புது சிருஷ்டி மூன்று நாட்களின் பகுதிகளில் நித்திரையாயிருந்தபின்பு, அவர் தெய்வீக சுபாவத்திற்கு உயிரோடெழுப்பப்பட்டார். அவர் சிலுவையின் மரண பரியந்தம் வரைக்கும், உண்மையுள்ளவரா யிருந்ததற்கு ஒரு வெகுமதியாக தேவனுக்குக் கீழாக அடையக் கூடிய மிக உயர்ந்த சுபாவத்திற்கும் நிலைக்கும் தம்முடைய பரம பிதாவின் வலது பாரிசத்திற்கும் உயர்த்தப்பட்டார். இது மனிதனாவதற்கு முந்தி லோகாஸ் -ஆக (Logos) இருந்த அவருடைய நிலைக்கு மேலானதாயிருந்தது. இயேசு அந்த வேளையிலிருந்து இப்போது வரைக்கும் சாவாமையுள்ள தெய்வீக நிலைமை யில் வாசம் செய்து வருகிறார். ஆனால் அவர் மனித ஜீவிக்குரிய நிலைமையில் வாழும் உரிமையையும்கூட



தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். இந்த உரிமையை கல்வாரியின் மீது அவருடைய மரணத்தின் மூலம் அவருக்காக சம்பாதித்துக் கொள்ளப்பட்டது. இப்போது அவருடைய உயர்த்தப்பட்ட நிலையில், "**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் ...... எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கிறார்,**" அவர் தான் ஒரு மனிதனாக ஜீவிப்பதற்கு அவசியமோ அல்லது ஆசையோ கொண்டிருக்கவில்லை. அவர் இந்த மானிட ஜீவனுக்குரிய உரிமையை – ஆதாமுக்காகவும், அவனுடைய சந்ததிக்காகவும் ஏற்ற சமயத்தில் பயன்படுத்தப்படுவதற்காக தேவனிடமும், தேவ நீதியிடமும் சேமிப்பாக ஒப்படைத்திருக்கிறார். மனுக் குலத்தாரின் மீட்பு சம்பந்தமாக பிதாவின் சித்தத்தைச் செய்யவும், நிறைவேற்றுவதற்காகவுமே இயேசு பூமிக்கு வந்தார்.

அது ஏன் இப்போது இல்லை? என்று சிலர் கேட்கிறார்கள். நல்லது, உண்மையாகவே, இயேசு தெய்வீக சுபாவத்தில் உயிர்த்தெழுந்த உடனே ஏன், ஆதாமுக்கான தம்முடைய மீட்கும் பொருளின் நன்மைகளைப் பிரயோகிக்கவில்லை? ஆ! தேவனுக்கு ஒரு திட்டமிருக்கிறது, அதை தற்காலம் வரைக்கும் ஒவ்வொரு விவரத்தையும் நுணுக்கமாக, நடைமுறைப்படுத்தி வருகிறார். அல்லாமலும் தேவன் ஒழுங்கு முறையின் தேவனாயிருக்கிறார். மகா பெரியதும், ஆச்சரியமானதுமான அந்த நிகழ்ச்சிக்கு தேவையான ஆயத்தம் செய்யாமல் மரண நிலையிலிருந்து மகா பெரிய விழித்தெழுதலுக்கு சரியாக கணக்கிடப்பட்ட கோடிக்கணக்கான ஜனங்களை விடுதலையாக்கி திரும்பக் கொண்டுவருவதின் விளைவு எந்த அளவு குழப்பமும், வேதனையும் நிறைந்ததாக இருக்கக் கூடுமென உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? (யோவா. 5:28,29 RSV). ஆகையால் உலகத்தாருக்கு இழந்து போனதைத் திரும்ப கொடுக்கும் வேலையில் இயேசுவுக்கு உதவி செய்வதில் ஈடுபடுகிற ஆட்களுக்கு பயிற்சி கொடுக்கும் அந்த ஒரே நோக்கத்திற்காகவே யேகோவா பல்வேறான தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை அழைத்துக் கொண்டிருக்கிறார். (யோவா. 3:16). எனவே சுவிசேஷ யுகத்தின்போது, இயேசு தம்முடைய மணவாட்டி வகுப்பாரை அழைத்தார். அவர்களும் தங்கள் கர்த்தரைப் போலவே தெய்வீக சுபாவத்தின் சிலாக்கியங்களுக்குரிய பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டார்கள். இந்த வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட்ட மற்ற வகுப்பினர்களும், தெரிந்தெடுக்கப்படாத உலகத்தாரும்கூட பூரணமடைவதற்கு இன்றியமையாதவர்களாயிருக்கிறார்கள். (எபி. 11:40).


## இயேசு என்ன செய்தார்?

ராஜ்யத்தை நோக்கி பிரயாணம் செய்யும் சபையாருக்கு தேவையாயிருந்தது என்ன? அவர்கள் நம்முடைய கர்த்தரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தபடியால், இயேசு என்ன செய்தார்? என்று நாம் விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவர் முதலாவதாக ஆதாமுக்காகவும், மனுக்குலத்தார் எல்லாருக்காகவும் தம்முடைய பூரண மனிதனுக்குரிய எல்லாவற்றையும் பிரதிஷ்டை செய்து, பலிபீடத்தின்மீது அதனை வைப்பதன் மூலமாகத் தமது ஊழியத்தைத் தொடங்கினார். அதன்பிறகு உடனடியாகவே அவர் தம்முடைய பிரதிஷ்டையின் அடையாளமாகிய ஞானஸ்நானத்திற்காக யோவானுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தார். அந்த சமயத்தில் இயேசு ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டார். (மத். 3:16). எனவே $3^1/_2$ வருடங்களாக இரண்டு ஜீவிக்குரிய கடமையை இயேசு நிறைவேற்றினார். அவர் ஆதாமுக்கான மீட்கும் பொருள் விலையை கொடுக்கிற பங்கை நிறைவேற்றிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் கூடுதலாக கருப்பருவத்திலான புது சிருஷ்டியின் வளர்ச்சிக்காகவும் கிரியை செய்தார்; அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டபோது உயிர்த்தெழுதலில் ஆவி ஜீவியாக அவருடைய பிறப்புக்கான உத்திரவாதமளித்தது.

## சபைக்கான புண்ணியம்

இயேசுவின் புண்ணியம் நேரடியாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு பயன்படுத்தப்படவில்லை, ஏனெனில் அப்படி செய்யப்பட்டிருந்தால், அது அவர்களுக்கு மட்டும் இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலை அருளுவதாகவும், உலகத்தார் மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார்கள் உட்பட மற்ற எல்லாரையும் இரட்சிப்பில்லாமல் விட்டுவிடுவதாகவும் இருந்திருக்கும். புண்ணியத்தை ஒரே ஒரு தடவை மட்டுமே பயன்படுத்த முடியும். மேலும் அவர்கள் தங்களுக்கு வாக்களிக்கப்பட்டபடியே (2 பேது. 1:4) இயேசுவுடன் "பரலோகத்தில்" தெய்வீகமான சாவாமையுள்ள ஜீவனுக்காக "நெருக்க வழியில்" பயணம் செய்வதற்கு மாறாக, "பெரும் பாதையில்" மானிட நிலைமையில் பூரண ஜீவனுக்காக பிரயாணம் செய்து கொண்டிருப்பார்கள். நம்முடைய கர்த்தர் தம்முடைய மானிட ஜீவனை தேவனுக்கு அர்ப்பணித்ததற்கும், சபைக்குரியவர்கள் தங்கள் ஜீவனை தேவனுக்கு அர்ப்பணித்ததற்கும், குறிப்பிடும்படியான வித்தியாசம் இப்போது காணப்பட்டது. இயேசு செலுத்தியது பூரண பலியாயிருந்தது. அவருடைய சரீர அங்கத்தினர்கள் செலுத்தியது பூரணமில்லாததாகவும் பாவமுள்ளதாகவும் இருந்ததால், தேவ நீதியால் ஏற்றுக் கொள்ள முடியாததாயிற்று. எனவே அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன்பின்பு பிரதிஷ்டை செய்வதற்கு முன்பு நீதிமானாக்கப்படுதல் அவசியமாயிருந்தது. இயேசு தம்முடைய மனுஷீகத்தை ஏற்கெனவே ஆதாமுக்காகவும், அவனுடைய சந்ததிக்காகவும் பலியாக செலுத்தி விட்டபடியால், எப்படி அவர் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை நீதிமான்களாக்க முடிந்தது?

இயேசு தம்முடைய புண்ணியத்தை சிறுமந்தையினருக்கு சாட்டுதல் செய்தார், அது அவர்களுடைய அபூரணங்களை மூடியது, அதனால் அவர்கள் தேவ நீதியின் முன்பு பூரணமானவர்களாக எண்ணப்பட்டவர்களாக நின்றார்கள். இங்கே சாட்டுதல் என்ற சொல்லுக்கு




கொடுத்தல் என்று அர்த்தமல்ல. நம்முடைய கர்த்தர் தம்முடைய புண்ணியத்தை உலகத்தாருக்கு ஆயிர வருட யுகத்தின்போது இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலின் காலத்தில் பயன்படுத்துவார் (கொடுப்பார்). இயேசுவின் மரணம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் உட்பட, ஆதாம் வழி வந்தவர்கள் எல்லாருக்கும் மனிதனுக்குரிய உரிமைகளைப் பாதுகாத்தது. ஆனால் சபையானது மனிதனுக்குரிய இரட்சிப்பை மறுத்து அவர்கள் தமக்கு முன்னோடியானவரைப் போல, பூமிக்குரிய உரிமைகளை விட்டு விட்டு, தங்களுடைய கர்த்தருடன் தெய்வீக ஆவிக்குரிய இரட்சிப்பை அடைந்து கொள்ளும்படியாக அவைகளை பிரதிஷ்டையில் பலியிட்டார்கள். (2 பேது. 1:4).

## இயேசு எதை சாட்டுதல் செய்கிறார்?

சபை வகுப்பினர், ஆயிர வருட யுக ராஜ்யத்தில் இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலின் இரட்சிப்புக்காக காத்திருந்தார்களானால், அவர்கள் நீதிமானாகுதலைப் பெற்றுக் கொள்கிறதாக கர்த்தர் அவர்களைக் குறித்து கணக்கிடுகிறார். ஆனால் அவர்கள் சுவிஷேயுகத்தின் பரம அழைப்புக்குரிய செய்தியை கவனித்துக் கேட்டார்கள். இயேசு சிலுவையில் தாம் கூறிய கடைசி வார்த்தையில் தம்முடைய பலியின் நன்மைகளையும் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையையும் பிதாவிடம் ஒப்படைத்தார். (லூக். 23:46). இயேசு புண்ணியத்தை தேவ நீதியின் பாதுகாப்பில் ஒப்படைத்தார். இயேசுவின் மரணத்தின்போதும், அவருடைய உயிர்த்தெழுதலின் போதும், மற்றும் பரத்திற்கு அவர் ஏறிச் சென்றபோதும், அந்தப் புண்ணியம் ஆதாமுக்காக பயன்படுத்தப்படவில்லை என்பதை கவனிப்பது மிக முக்கியமாகும். இது தேவ நீதியின் கட்டுப்பாட்டில்தான் இன்னும் இருக்கிறது. ஆகவே கிறிஸ்துவின் மரணத்தின் பயன் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒரு கடனுதவியாக அருளப்படுகிறது. இதைக் குறைபாடுள்ளதாயிருந்தாலும் ஒருவர் ஒரு வீடு கட்ட ஒரு வங்கியிலிருந்து எப்படி பணம் கடனாகப் பெறுகிறார் என்பதன் மூலம் விளக்கிக் கூறலாம். வங்கியானது உங்களுடைய கடன் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்கிறபோது, நீங்கள் வங்கியிலிருந்து உடனடியாக எந்தப் பணமும் பெறுவதில்லை. வங்கி உங்களுக்கு அளிப்பது மூப்பது லட்சம் ரூபாய்க்கான உங்களுடைய கடன் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தெரியப்படுத்தும் கடிதம் மாத்திரமே. நீங்கள் இதனை ஒப்பந்தக்காரரிடம் காட்டுகிறீர்கள். மேலும் அந்தக் கடிதத்தில் கூறியுள்ள நிபந்தனைகளின்படி அந்த கட்டிடத்தின் பல்வேறு பகுதிகள் பூர்த்தியாகும்போது, வங்கியானது குறிப்பிட்ட சில தொகைகளை அந்த ஒப்பந்தக்காரருக்கு அளிக்கிறது. அதாவது அஸ்திபாரமும், முதல் தளமும் கட்டி முடிக்கப்படும்போது மூன்று லட்ச ரூபாயும், மேல்கட்டுமானமும், சுவர்களும் மேற்கூரையும் பூர்த்தியாகும்போது ரூபாய் ஆறு லட்சமும் கொடுக்கப்படுவது போன்றவை.

இப்போது இயேசுவின் புண்ணியம் தேவ நீதியாகிய வங்கியில் உள்ளது. அது இதுவரை கொடுக்கப்படவில்லை, தேவனுக்கு ஏற்ற வேளையில் ஆதாமுக்காகவும், உலகத்தாருக்காகவும் அடுத்த யுகத்தில் இது பயன்படுத்தப்படும். ஆனால் புண்ணியமானது ஆயிர வருட யுக அரசாட்சியில் பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக, தேவனுக்கு ஊழியஞ்செய்ய வருகிறவர்களான தெரிந்தெடுப்புக்குட்பட்டவர்களுக்கு கடனுதவியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாகும். ஆகவே புண்ணியம், பிரயோகிக்கப்படுவதன் மூலமாக கிடைக்கக் கூடியதாக இல்லாத போதிலும்கூட சபை வகுப்பினர் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றிருப்பதாக தேவன் எண்ணுகிறார்.

## வேதாகமக் கோட்பாடு இங்கே முன்வைக்கப்படுகிறது

ரோம. 4:17; "**தேவன் மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகள் இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிறார்.**" தேவன் சர்வ ஞானமுள்ளவர் (எல்லாவற்றையும் அறிந்தவர்), சர்வ வல்லவர் (சகல வல்லமையும் கொண்டவர்); அவர் தம்முடைய சிருஷ்டிகள் தம்முடைய நீதியான குணாம்சமாகிய பூரண ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமைக்கு இசைவாக இருக்கிற வரைக்கும், அவர்களின் ஆசீர்வாதங்களுக்காக எதையும் செய்யக் கூடியவராயிருக்கிறார். அதன்படி சபையை அவர், புண்ணியம் அவர்களுக்கு நேரடியாக கொடுக்கப்பட்டிருப்பது போலவே கருதி நடத்துகிறார், ஆனால் அது உண்மையிலேயே அப்படியாக இல்லை. நாம் மூப்பரான பாத்திரவான்களையும், ஆபிரகாமையும் உதாரணமாக எடுத்துக் கொள்வோம், ரோம. 4:3, "**வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்கிறது.**" இது எப்படியாகும்? என்று நாம் கேட்கலாம். கிறிஸ்து மீட்கும் பொருள் கிரையமாக மரிப்பதற்கு 2000 வருடங்களுக்கு முன்பு ஆபிரகாம் வாழ்ந்தார். ஆம், ஆனால் தேவன் தம்முடைய முன்னறிவினால், இயேசு பிதாவின் ஒரே பேறான குமாரனாக அந்த பலியை எப்போது நிறைவேற்றுவார் என்று அறிந்திருந்தார். மேலும் தானி. 9:23-27-ல் தீர்க்கதரிசனமாக உரைத்தபடியே

இயேசுவின் பலி சிலுவையின் மீது AD 33 வசந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டபோது, அது எழுபதாவது வாரத்தின் மத்தியாக இருந்தது, அத்துடன் மூன்றரை வருடங் களுக்குப் பிறகு எழுபது அடையாளமான வாரங்கள் கி.பி.36 இலையுதிர் காலத்தில் முடிவடைந்தது. இந்த தேதிக்கு 490 ஆண்டுகள் அல்லது 70 அடையாளமான வாரங்களுக்கு (70x7) முன்பு கி.மு. 455 அக்டோபரில் இந்த தீர்க்கதரிசனத்தின் ஆரம்பத்தை குறிப்பிடுகிறது.

தேவன் ஆபிரகாமிடம், நீ இப்போது பிரதிஷ்டை செய்ய தீர்மானித்திருப்பதாலும், கிறிஸ்துவின் புண்ணிய மானது ஆயிர வருட யுகத்தில் பயன்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டியதில்லையாதலால், நான் உனக்கு முன்கூட்டியே கடன் தொகையை இப்போது கொடுக்கப் போகிறேன் என்ற உண்மையைச் சொன்னார். பாவத்திற் கான இயேசுவின் பலி இன்னும் கொடுக்கப்படவில்லை என்ற போதிலும், நான் உன்னுடைய விசுவாசத்தை நீதிமானாக்கப்படுதலுக்காக கணக்கில் எடுத்துக் கொள்வேன் என்றார். அப்போஸ்தலன் ஆவியினால் ஏவப்பட்டு இந்த காரியத்தைப் பற்றி, "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்" என்று சொன்னபோது, இந்த காரியம் சரியான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுவதாக அறிவித்தார். தேவன் முடிவான காரியத்தை ஆரம்பத்திலிருந்தே பார்த்து, புண்ணியமானது ஆபிரகாம் சார்பாக ஏற்கனவே பிரயோகிக்கப்பட்டதாகக் கருதி அவனை நடத்தினார். ஆபேல் முதல் யோவான் ஸ்நானன் வரை உள்ள மூப்பரான பாத்திரவான்களின் மொத்த வகுப்பாருக்கும் இந்த சூழ்நிலை ஒரே மாதிரியாகவே இருந்தது.

இப்போது சபைக்கும் சூழ்நிலையானது அதே போன்றுதான் இருந்தது. அதாவது, இயேசு சிலுவை யிலறையப்படுவதற்கு முன்பாக, பன்னிரெண்டு அப்போஸ் தர்களும், எழுபது பேரும் பரிசுத்தாவியால் முன் கூட்டியே அபிஷேகம் பெற்றார்கள். (மத். 10:1; லூக். 10:19). அவர்களை அபிஷேகம் செய்ததன் மூலமாகவும், சபையில் மிக உயர்ந்த உத்தியோக ஸ்தானத்தில் அவர்களை ஏற்றுக் கொண்டதின் மூலமாகவும், தேவன் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு சரி சமமானதாக அவர் கருதியதை அவர்களுக்குக் கொடுத்து அதன்படி நடத்தினார். எப்படியெனில் 82 நபர்கள் கர்த்தருடன் அவருடைய உத்தியோகம் மற்றும் பாடுகளில் பங்கு கொள்பவர்களாக இருப்பதால், தேவன் மேலே கூறப்பட்ட சூழ்நிலைகளின் கீழ், எதிர்பார்ப்புடன் அவர்களுக்கு நீதிமானாகுதலையும், ஜீவனுக்கான ஒரு பரீட்சையையும் கொடுத்திருக்க வேண்டும். (PT'98, p50; PT'84, p29).

ஆயினும் 1,44,000 பேரில் மீதியானவர்கள் புண்ணியத்தின் பலனையும், பரிசுத்தாவியின் அபிஷே கத்தையும் பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு பெற்றுக் கொண்டார்கள். ஆபிரகாமையும் மூப்பரான பாத்திரவான்களையும், "**தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறார்**" என்ற வேதாகம கோட்பாட்டின்படி, நடத்தியதுபோல சிறுமந்தையையும் நடத்துகிறார். மீட்கும் பொருளானது ஏற்கனவே நிறை வேற்றப்பட்ட போதிலும்கூட ஆதாமுக்காகவும், அவனி லுள்ள மனுக்குலத்தாருக்காகவும், இயேசுவின் புண்ணியம் பயன்படுத்தப்படுவது அப்போது நடந்தேற வில்லை, இந்த அநேக ஆண்டுகளுக்குப் பின்பும் அந்த மகா பெரிய இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் நிகழ்வு தேவனுடைய ஏற்ற காலத்தில் அறிமுகப் படுத்தப்படுவதற்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கி றோம். அது எதிர் காலத்தில் சில ஆண்டுகளில் நடக்கும் என்று தோன்றுகிறது. தேவன் சபைக்கான இரட்சிப்பின் திட்டம் நிறைவேறுவது தொடர்பாக இந்த "காத்திருக்கும் நாட்களைப் பற்றி" அறிந்திருந்தார், ஆனால் அப்போஸ் தலர்கள் இந்த காரியத்தை முழுமையாக அறிந்திருக்க வில்லை. மற்றொரு சமயத்தில், அவர்கள் கர்த்தரிடம், "**இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?**" என்று கேட்டார்கள். இஸ்ரயேல் திரும்ப கூட்டிச் சேர்க்கப்படுதல் பணி தொடங்குவதற்கு சுமார் 1900 வருடங்களுக்கு முன்பாக யூத யுக அறுவடை காலத்தில் அவர்கள் ஆயிர வருட யுக ராஜ்யத்தின் காரியங்களை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இஸ்ரயேலுக்கு வரும் ஆசீர்வாதங்களைக் குறித்து பரிசுத்தவான்கள் விசுவாசக் கண்கள் மூலமாக மட்டுமே பார்த்த தேவனுடைய திட்டத்தின் அம்சங்கள் யாவும், 1948-ல் யூத ஜனங்கள் பாலஸ்தீனா தேசத்தில் உண்மையாகவே குடியமர்த்தப்படுவதின் மூலம் இப்போது காலங்களின் அடையாளங்களில் நிறைவேறி வருவதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**